OKULAM

ஏப்ரல் 2010 • 80 பக்கங்கள் • விலை ரூ.8/-

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



ஆஹா, யோகா!

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1526


1527


1528


1529


1530


1531


1532


1533


1534


1535


1536


1537


1538


1539


1540


1541


1542


1543


1544


1545


1546


1547


1548


1549


1550

தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்.

கல்கி
தரம் நிரந்தரம்

கோகுலம்

ஏப்ரல் 2010 மலர் : 28 இதழ் : 3

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்



விடுமுறை விளையாட்டு!

டியர் குட்டீஸ்,

உற்சாகமான விடுமுறைக் காலம் தொடங்கி விட்டது. விளையாட்டும் வேடிக்கையுமாக ஆனந்தமாக இந்த விடுமுறைக் காலத்தைக் கொண்டாடுங்கள். அதேசமயம், பயனுள்ளதாகவும் ஆக்கிக் கொள்ள முடியும். எப்படி?

நம்முடைய புத்திசாலித்தனத்தை வளர்ப்பதற்குப் பயன்படும் விளையாட்டுக்களை விளையாடுங்கள். மண்டை பிளக்கும் வெயிலில் வெளியே ஓடாமல், நிழலில் அமர்ந்தும் இவற்றை விளையாடலாம். நான்கைந்து பேராகச் சேர்ந்து விளையாடுகிறீர்கள் என்றால், ஒரே எழுத்தில் தொடங்கும் வார்த்தைகளைச் சொல்லி விளையாடலாம். உதாரணமாக, தமிழில் 'க' என்ற எழுத்தில் தொடங்கினால், களை, கலை, கண், கருத்து இப்படி ஆளுக்கு ஒரு வார்த்தையைச் சொல்லலாம். ஆங்கிலம் என்றால், man, moon, music... என்று அடுக்கலாம். இப்படி விளையாடுவதன் மூலம் உங்களின் மொழியறிவும் வளரும்; விளையாட்டும் சுவாரஸ்யமாகும்.

இந்த விடுமுறைக் காலம், உங்களுக்கு கூர்ந்த கவனத்தையும், வளர்ச்சியையும் அளிப்பதாக அமையட்டும்.

அன்புடன்,
கோகு



மினி கதை

என்ன கொடுப்பீர்?

பெரும் பணக்காரராகத் திகழ்ந்த ஆனந்தர், தம் செல்வத்தை ஏழைகளுக்கு உதவுவதிலேயே, செலவிட்டார். ஏழை யானார்; ஆனாலும் அவர் குணம் மாற வில்லை. துறவு மேற்கொண்ட அவரை அருளானந்தர் என்றனர் மக்கள். அதற் கேற்ற மாதிரி ஏழை எளிய மக்களுக்காக வாழ்வதே தம் கடமை என்று நினைத்தார். அந்த ஊரிலிருந்த செல்வர் ஒவ் வொருவர் வீடாகச் சென்று உதவி கேட்டார். அவரின் இயல்பை அறிந் திருந்த அவர்களும், தாராளமாகப் பணம் தந்தார்கள்.

ஒருமுறை அவர் செல்வர் ஒருவரின் வீட்டுக்குச் சென்ற போது, அங்கே அந்தச் செல் வருடன் நண்பர்கள் சிலர் பேசிக் கொண்டிருந்தனர்.

செல்வரைப் பார்த்து "ஒரு ஏழைப் பெண்ணுக்காக உங்கள் உதவியை நாடி வந்தேன்," என்றார் அருளா னந்தர்.

"இன்று என்னால் ஏதும் தர இயலாது," என உடனடியாக மறுத்தார் அந்த செல்வர்.

அருளானந்தர் விடவில்லை. "அருள் உள்ளம் கொண்ட நீங்கள் அப்படிச் சொல்லக்கூடாது. தன் உழைப்பையே நம்பி வாழும் கூலிக்காரி இவள். மேலே இருந்து கீழே விழுந்ததால், இவள் கால் முறிந்து விட்டது. அந்த ஏழைத் தாயின் குழந்தை பாலின்றிப் பசியால் வாடுகிறது. தயவு செய்து உதவி செய்யுங்கள்." கெஞ்சினார் அருளானந்தர்.

"என்னால் இன்று இயலாது என்று சொன்னேனே...!" மறுத்தார் செல்வர்.

"ஐயா, நீங்கள் நல்லவர் இந்தச் சூழலில் உதவி செய்தேயாக வேண்டும்."



''எனக்குத் தொல்லை தராதீர்கள்!'' என்று எரிச்சலுடன் சொல்லிவிட்டு, அடுத்த அறைக்குள் சென்றார் செல்வர்.

செல்வரைத் தொடர்ந்து அருளானந்தரும் அந்த அறைக்குள் சென்றார்.

''ஐயா! இரக்கம் காட்டுங்கள்'' என்று தொடர்ந்து கெஞ்சிக் கொண்டிருந்தார்.

கோபம் கொண்ட செல்வர், அருளானந்தரின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார். இதைப் பார்த்த அங்கிருந்தவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். இதை ஊர் மக்கள் அறிந்தால் செல்வருக்கு என்னென்ன தொல்லை நேரிடுமோ என்றும் நினைத்தார்கள்.



'ஐயோ கோபத்தில் என்ன தவறு செய்துவிட்டோம்? எப்படிப்பட்ட பெரியவரை அடித்து விட்டோம். இது எவ்வளவு பெரிய தவறு!' என்று வருந்தினார் செல்வர்.

ஆனால், தம் கன்னத்தைத் தடவிய அருளானந்தர் சற்றும் கோபப்படவில்லை. புன்னகை மாறாமல், ''எனக்கு அடி கொடுத்துவிட்டீர்கள். நன்றி, அந்த ஏழைக்கு...'' என்று மீண்டும் கேட்டார்!

அதைக் கேட்ட செல்வர் 'என்னை மன்னித்துவிடுங்கள்!' என்று சொல்லிக் கண் கலங்கினார். அந்தப் பெண்ணுக்குத் தேவையான உதவிகளையும் செய்தார்.

- ஆர்.ஆசிக் அகமது,
உ.எண் 1157,
நாகமணியம்மாள்
நினைவு மெட்ரிகுலேசன்
பள்ளி, கம்பம்

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : **சீதா ரவி**

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
tamilgokulam@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.96/-
வெளிநாடு : ரூ.1000/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

குழந்தைகளின் குதூகலம்!



கவர் ஸ்டோரி

ஆஹா, யோகா!

"யோகா செய்யத் துவங்கி சில மாதங்கள்தான் ஆச்சு. ரொம்ப சுறுசுறுப்பா இருக்கேன். படிக்கற பாடம் எல்லாம் நல்லா ஞாபகத்திலேயே இருக்கிறது. எனக்குப் பதினாறு ஆசனங்கள் தெரியும்," என்கிறாள் புஷ்பராணி பெருமையுடன். சென்னை, ஷெனாய் நகர் சுப்பராயன் தெருவில் உள்ள மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு படிக்கிறாள் இந்தச் சிறுமி. அப்பாவுக்குக் கூலி வேலை, அம்மா வீட்டு வேலை செய்து வருபவர். பெற்றோர்களுக்குத் தங்கள் பெண் படிப்பதைக் கண்காணிக்க நேரமும் கிடையாது; படிப்பறிவும் கிடையாது. அன்றாட வாழ்க்கையே போராட்டம் அவர்களுக்கு. ஆனால் புஷ்பராணிக்கு படித்துப் பெரிய அதிகாரி ஆகவேண்டுமென்று ஆசை. காலையிலும் மாலையிலும், படிப்பதற்கு முன் வீட்டில் பத்து நிமிடம் யோகாசனங்கள் செய்கிறாள்.

"எனக்கு 25 ஆசனங்கள் தெரியும். இப்பல்லாம் நான் ரேங்க் எடுக்கறேன். பெரிய யோகா மாஸ்டராகி நிறைய பேருக்கு யோகா கற்றுத் தருவேன்," என்கிறான் ஒன்பதாவது படிக்கும் வினோத்!

புஷ்பராணி, வினோத் மட்டுமல்ல; சென்னை மாநகராட்சியின் 369 தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் சுமார் ஒரு லட்சம் மாணவ மாணவிகளுக்கு, யோகா சொல்லித் தரும் திட்டம் இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தப் பணியில், தனியார் தொண்டு நிறுவனம் ஒன்று மாநகராட்சியோடு கூட்டணி சேர்ந்திருக்கிறது. சுழற்சி முறையில் பள்ளிகளுக்கு யோகா மாஸ்டர்கள் வாரம் ஒரு முறை விசிட் செய்து ஒரு மணி நேரம் யோகா கற்றுத் தருகிறார்கள். இது தவிர நூறு ஆசிரியர்களை ஆழியார் வேதாத்திரி மகரிஷி யோக-தியான



அட்டை வண்ணப்படங்கள் : ராஜன்

ப்ரியன்

மையத்துக்கு அனுப்பிப் பயிற்சி எடுத்து வரச் செய்திருக்கிறது மாநகராட்சி.

சிறந்த பள்ளி என்று விருது பெற்றுள்ளது ஷெனாய் நகர், சுப்பராயன் தெருவில் உள்ள மாநகராட்சிப் பள்ளி.

"இந்தப் பள்ளியில் படிக்கும் 95 சத விகித மாணவ, மாணவிகளின் குடும்பங் கள் பொருளாதாரத்தில் பின் தங்கியவை. பெற்றோர்கள் கூலி வேலை, ஆட்டோ ஓட்டுனர், வாட்ச்மேன், கொத்தனார், டைலர், வீட்டு வேலை என்றுதான் பிழைப்பு நடத்துகிறார்கள். வீட்டில் படிப்பதற்கான சூழலே இருக்காது. இந்த நிலையில் அவர்களுக்குப் படிப்போடு, ஆரோக்கியத் துக்கும் அடிப்படையான யோகாவை நாங்கள் கற்றுத் தருகிறோம். ஆர்வத்தோடு அவர்களும் கற்றுக் கொள்கிறார்கள் என்பதுதான் மகிழ்ச்சியைத் தருகிறது," என்கிறார் தமிழாசிரியரான செழியன்.

பள்ளியின் விளையாட்டு ஆசிரியரான பிரேம்குமாரும் யோகா பயிற்சி தரு கிறார். "நூற்றுக் கணக்கான ஆசனங்கள்



✱ முருகையன்



✱ செழியன்



✱ பிரேம்குமார்

இருந்தாலும், 34 ஆசனங்களைத்தான் கற்றுக்கொடுக்கிறேன். இங்கு கற்றுக் கொள்வது, பயன் கொடுக்க வேண்டுமென்றால், வீட்டிலும் காலையும் மாலையும் பயிற்சி செய்ய வேண்டும் என்பதுதான் நான் சொல்வது'' என்கிறார் இவர்.

''மாணவர்கள் வீட்டிலும் யோகா செய்கிறார்கள். அதன் பலன் நன்றாகவே தெரிகிறது. இப்போது அவர்களிடம் ஒழுங்கும், கட்டுப்பாடும் வந்துள்ளது. சிந்திக்கும் ஆற்றல் வளர்ந்துள்ளன. நோய் எதிர்ப்பு சக்தியும் கூடியுள்ளது. எதையும் கற்றுக் கொள்வதில், படிப்பில் ஒரு துடிப்பும், ஆர்வமும் சேர்ந்துள்ளன. நினைவாற்றல் கூடியுள்ளதையும் நான் பார்க்கிறேன்'' என்கிறார் தலைமையாசிரியர் முருகையன்.

எண்ணூற்று ஐம்பது மாணவ மாணவியர் படிக்கும் இந்தப் பள்ளியின் கடந்த வருட பத்தாவது தேர்ச்சி, 86 சதவிகிதம். இந்த வருடம் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்ப்பும் இருக்கிறது.

மனத்தை ஒருமுகப்படுத்தவும், உடலில் புத்துணர்வு நிலவவும், யோகா ஒரு நல்ல பயிற்சி. தவிர, மன அழுத்தம், கவலை போன்றவற்றிலிருந்து விடுபட நல்ல வழியும் இதுதான். மாணவப் பருவத்திலேயே இதற்கான வாய்ப்பு அமைவது ஒளிமயமான எதிர்காலத்துக்கும் ஓர் உத்தரவாதம்!

''யோகா பயிற்சியினால், மாணவ, மாணவிகளின் ஆரோக்கியம் மேம்படுகிறது; தேர்ச்சி சதமும் அதிகமாகி வருகிறது. கடந்த ஆண்டு பத்தாவது மற்றும் ப்ளஸ் டூவில் மாநகராட்சிப் பள்ளிகளின் தேர்ச்சி விகிதம் 80 சதத்துக்கு மேல். அதை அதிகரிக்கும் வகையில் பல்வேறு ஊக்கத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். நல்ல மதிப்பெண் எடுத்து தேர்ச்சி பெறுபவர்களுக்குப் பொறியியல், மருத்துவம், நர்சிங், கலை அறிவியல் பட்டமேல்படிப்பு படிக்க உதவித் தொகை தருகிறோம். இதுதவிர ரொக்கப் பண பரிமாற்றமும் உண்டு. தேர்வின்போது சிறப்பு வகுப்புகள் நடத்துகிறோம். இப்போது எல்லாத் தொடக்கப் பள்ளியிலும் ஆங்கில மீடியமும் துவங்கியிருக்கிறோம். இன்னமும் சில வருடங்களில் பாருங்கள். தனியார் பள்ளிகளைப் போல நூறு சத தேர்ச்சியை மாநகராட்சிப் பள்ளிகளும் பெறப் போகின்றன'' என்று உறுதிபடச் சொல்கிறார் மேயர் மா. சுப்பிரமணியன்.

அப்படிச் செய்யுங்கள் சார்; அதைத்தான் உங்களிடம் எதிர்பார்க்கிறோம்!

✱ மா. சுப்பிரமணியன்



உங்கள் கவனத்துக்கு!

● சிறுவர் சங்க உறுப்பினராக குறைந்த பட்சம் ஐந்து வயதாகியிருக்க வேண்டும்.

● பட்டியல் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள கூப்பனை நிரப்பி, புகைப்படத்தை இணைத்து அனுப்புங்கள். (ஜெராக்ஸ் எடுப்பதைத் தவிர்க்கவும்.)

● சிறுவர் சங்கக் கூப்பனை அனுப்பும்போது, அதில் புகைப்படத்தை ஒட்டி அனுப்புங்கள். புகைப்படம் இல்லாமல், அனுப்பப்படும் கூப்பன்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

● உறுப்பினர் சங்கத்தில் உங்கள் புகைப்படம் இடம் பெற்றுவிட்டது என்றால், அந்தப் புகைப்படத்தின் கீழ் குறிப்பிட்ட எண்தான் உங்களுடைய உறுப்பினர் எண். எனவே, உறுப்பினர் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள், அந்த எண்ணைக் குறிப்பிட்டுத் தங்கள் படைப்புகளை அனுப்பலாம்!

● முதல் வகுப்பு முதல் மேல் நிலைப் பள்ளி வரை பயிலும் அனைவரும் உறுப்பினர் சங்கத்தில் இடம் பெற முடியும்.

● இதற்கு எந்தக் கட்டணமும் கிடையாது.

● நீங்கள் உறுப்பினர் எனில், படைப்புகளை அனுப்பும்போது உங்களுக் கான உறுப்பினர் எண்ணைக் குறிப்பிட மறக்காதீர்கள்.

● **ஏற்கெனவே உறுப்பினர் சங்கத்தில் இடம் பெற்றவர்கள் மீண்டும் சிறுவர் சங்கக் கூப்பனை அனுப்ப வேண்டாம்.**

● உறுப்பினர் அல்லாதவரும் தங்கள் படைப்புகளை எழுதி அனுப்பலாம். சில குறிப்பிட்ட போட்டிகளில், உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும்.



● மாணவர்கள் தங்கள் படைப்புகளின் பின்பக்கம், பெயர், வகுப்பு, பள்ளி, ஊர், உறுப்பினர் எண் ஆகியவற்றையும், வீட்டு முகவரியையும் தெளிவாக எழுதி அனுப்பவும்.

● **பிறர் எழுதி வெளியான கதை, கட்டுரை, கவிதை... போன்றவற்றை, மீண்டும் உங்கள் பெயரில் எழுதி அனுப்பாதீர்கள். இது மிகத் தவறு.**

● நீங்கள் அனுப்பும் கதை, கட்டுரை, கவிதை போன்றவை உங்கள் சொந்தப் படைப்பாக இருக்க வேண்டும் என்பது மிக முக்கியம்.

ஆசிரியர், கோகுலம்

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

வெற்றிக்கு வழி!

"ஐயா, நீங்கள் இவ்வளவு சாதனைகளைச் செய்துள்ளீர்களே. இத்தகைய வெற்றி பெறுவது எப்படி என்று சொல்லமுடியுமா?"

கேள்வி எழுப்பியவரைப் பார்த்தார் விஞ்ஞானி ஐன்ஸ்டீன்.


"மிகச் சுலபம். A = x+y+z" என்றார் பதிலாக. கேட்டவர் குழம்பிப் போனார். தயக்கத்துடன், "ஐயா, நீங்கள் சொல்வது புரியவில்லை" என்றார். ஐன்ஸ்டீன் சொன்னார் :

"A என்பது வெற்றி, x என்பது உழைப்பு, y என்பது ஆரோக்கியமான விளையாட்டு." இதைக் கேட்டவுடன் வந்தவர் அவசரமாக, "அப்படியானால் Z என்பது என்ன? அதைச் சொல்லவில்லையே?" என்றார்.

உடனே ஐன்ஸ்டீன் சொன்னார், "அதிகம் பேசாமல் வாயை மூடிக் கொண்டிருப்பது!"

ஏன் என்றார் கேட்டவர். "வேறொன்றுமில்லை. செயல் வெற்றி பெறவேண்டுமானால் பேச்சை குறைத்துத்தான் ஆகவேண்டும். இல்லாவிட்டால், வெற்றி விலகிப்போய்விடும்."

- பா.கணேசன், உ. எண் 467, வடபுதுப்பட்டி





துணிந்து செல்!

பதிலேதும் பேசாமல் மௌனமாக நின்று கொண்டிருந்த தளபதியை உற்றுப் பார்த்தார் மாவீரர் நெப்போலியன். படையெடுப்பைப் பற்றிச் சொன்னவுடனே, விரைந்து புறப்படும் தளபதி தயங்கி நிற்பதைக் கவனித்தார். என்னவென்று கேட்டார்.

"அரசே! நம்முடைய பாதையில் உள்ள மிகப் பெரிய தடை டான்யூப் நதி. அதைக் கடந்து செல்ல முடியாது. இதுவரை யாரும் கடந்ததும் இல்லை."

அந்த பதிலைக் கேட்ட நெப்போலியன் சொன்னார். "நீங்கள் சொல்வது உண்மை தான். இதுவரை யாரும் கடக்கவில்லை. ஆனால், நதி



எங்கே இருக்கிறது?''

''எழுபத்தைந்து கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது.''

''பிறகென்ன? கடக்க வழியுண்டா என்பதை, நதியைப் பார்த்த பிறகல்லவா முடிவு செய்யவேண்டும்? அதற்காக இங்கு ஏன் தயங்குகிறீர்கள்? புறப்படுங்கள்!''

ஏராளமான குதிரை வீரர்களுடன் கிளம்பிய அவர் படை, டான்யூப் நதியைக் கடந்தது; எதிரிகளை துவம்சம் செய்தது; நெப்போலியனை பிரெஞ்சு சக்கரவர்த்தியாக்கியது. அதற்குக் காரணம், நெப்போலியனின் அசாதாரணத் துணிவுதான்.

- ஜி.எஸ்.ஸ்ரீமதி,
உ. எண் : 1382,
கோபி

துறவு நெறி!

அடுத்தடுத்த வெற்றிகளால் மகிழ்ந்திருந்த அலெக்சாண்டர், இந்தியத் துறவிகளில் ஒருவரை சந்திக்க விழைந்தார். எனவே, அங்கு பலரும் மதித்துக்கொண்டாடிய ஒரு துறவியைக் காணப் புறப்பட்டார். அந்தத் துறவிக்கு மரியாதை செய்யும் விதமாக பழங்கள், உணவு, ஆகியவற்றை எடுத்துக் கொண்டு கிளம்பினார். அவரோடு வீரர்கள் பலரும் உடன் சென்றனர்.

அவர்களின் ஆரவாரத்தால், தவத்தில் ஆழ்ந்திருந்த துறவி கண் விழித்தார். 'என்ன வேண்டும்?' என்றும் வினவினார் 'இவர் கிரேக்க மாவீரர் அலெக்சாண்டர். உமக்குப் பரிசளிக்க வந்திருக்கிறார். ஏற்றுக்கொள்'' என்றனர் வீரர்கள். ''எனக்கு எதுவும் தேவையில்லை. இறைவன் அனைத்தையுமே அளிக்கிறான்'' என்றார் துறவி.

''என்னைச் சந்தித்த யாரும் வெறுங்கையுடன் போகக் கூடாது. எனவே நீங்களும் ஏதாவது பரிசு பெற்றே ஆகவேண்டும்'' என்றார் அலெக்சாண்டர். அவர் குரலில் சற்றே அகந்தை இருந்தது. அதைக் கவனித்த அந்தத் துறவி சொன்னார்:

''அப்படியா, சற்று நகர்ந்து நில். என்மீது படும் சூரிய ஒளியை மறைக்காதே!'' அதைக் கேட்ட அலெக்சாண்டர் துறவியின் மன உறுதியையும் தனது அறியாமையையும் ஒருங்கே புரிந்துகொண்டார்.

- ஜி.எஸ்.சபரி, உ. எண் 1475,
கோபி.




பற்களைப் பாதுகாக்கு

'பல் போனால் சொல் போகும்' என்பது பழமொழி. பற்களைப் பாதுகாக்க சுத்தம் மட்டும் போதாது, சத்துள்ள உணவுகளும் தேவை.

எனாமலைக் காக்கும் வைட்டமின்

உடலிலேயே மிகவும் வலுவான பகுதி எது என்று



கேட்டால் 'பல் எனாமல்' என்று பதில் சொல்வீர்கள். எனாமல் என்பது எது? பற்களில் வெண்மையாகத் தெரிகிறதல்லவா? அதுதான் எனாமல் எனும் மேற்பூச்சு. பற்களைப் பாதுகாக்கும் பெருங்கவசமாக இது விளங்குகிறது. இது சரியாக வளர்வதற்கு வைட்டமின் ஏ தேவை. பால், நெய், வெண்ணெய், பாலாடை, மீன், பச்சைக் காய்கறிகள், மஞ்சள் காய்கறிகள், கீரைகள் போன்றவற்றில் வைட்டமின் ஏ அதிகம். குறிப்பாகச் சொல்வதென்றால், காரட், பப்பாளி, மாம்பழம், மீன் எண்ணெய், சோளம் இவற்றை அடிக்கடி உணவில் சேர்த்துக்கொள்ளவேண்டும். தினமும் இரண்டு காரட் சாப்பிட்டு வந்தால் எனாமல் பலமடையும்.

கால்ஷியம் அவசியம்!

பற்களின் முழுமையான வளர்ச்சிக்குக் கால்ஷியம் மற்றும் பாஸ்பரஸ் சத்துகள் தேவை. இந்தச் சத்துகள் குறைந்தால், பற்களின் உறுதி பாதிக்கப்படும். எலும்பின் வளர்ச்சி குறைந்துவிடும். அப்போது பற்கள் சீக்கிரத்தில் விழுந்துவிடும். பால், பழம், வெண்ணெய், முட்டை, மீன் போன்ற உணவுகளில் கால்ஷியமும் பாஸ்பரஸும் மிகுதியாக உள்ளன.

தினமும் ஒரு முட்டை, அத்துடன் 300 மி.லி. பால் சாப்பிட்டு வந்தால், நமக்குத் தேவையான கால்ஷியமும் பாஸ்பரஸும் கிடைத்துவிடும். பற்கள் வலுவாக இருக்கும்.

ஃப்ளோரைடு தேவை!

கால்ஷியம் போன்றே ஃப்ளோரைடு சத்தும் பற்களின் நலனுக்கு அவசியமான ஒன்று. இது பொதுவாக நாம் குடிக்கும் தண்ணீரிலிருந்தே கிடைத்துவிடும். சில ஊர்களில், குடிநீரில் ஃப்ளோரைடு அளவு குறைவாக இருக்கும் அப்போது மருத்துவர் ஆலோசனைப்படி, ஃப்ளோரைடு கலந்த

டாக்டர் கு.கணேசன்

பற்பசையைப் பயன்படுத்திப் பல் துலக்க வேண்டும். மேலும், ஃப்ளோரைடு மாத்திரைகளைச் சாப்பிடவேண்டிய அவசியமும் ஏற்படலாம். அதேநேரத்தில் சில ஊர்களில் குடிநீரில் ஃப்ளோரைடு மிக அதிகமாக இருக்கும். இந்தக் குடிநீரைக் குடித்தால் பற்களில் கறை படியும். அப்போது குடிக்கும், சமைக்கும் நீரை மாற்றியாக வேண்டும்.

ஈறு வலுப்பெற....

பற்களைத் தாங்கி நிற்பவை பல் ஈறுகள். இவை வலுவாக இருந்தால்தான் பற்கள் நீண்ட காலம் விழாமல் இருக்கும். ஈறுகள் நன்கு வளர்வதற்கும் வலுவடைவதற்கும் வைட்டமின் பி-காம்ப்ளெக்ஸ் சத்துகள் அவசியம். கைக்குத்தல் அரிசி, கோதுமை, கம்பு, சோளம் போன்ற தானிய உணவுகள், பருப்பு வகைகள், கீரைகள், காய்கறிகள், கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி, ஈரல் போன்றவற்றில் வைட்டமின் பி

உணவுகள்!

காம்ப்ளெக்ஸ் சத்துகள் நிறைந்துள்ளன. தினமும் ஏதாவது ஒரு தானிய உணவுடன் பருப்பையும் சேர்த்துக் கொண்டு, வாரத்தில் இரண்டு நாள் ஏதாவது ஒரு கீரை சாப்பிட்டு வந்தால் பல் ஈறு வலுவாக அமையும்.


பற்களில் ரத்தக் கசிவு

சிலருக்குப் பற்களைத் துலக்கும்போது பற்களிலிருந்து ரத்தம் கசியும். இதற்கு வைட்டமின் சி சத்துக் குறைவுதான் காரணம். இந்த நோய்க்கு 'ஸ்கர்வி' என்று பெயர். ஆரஞ்சு, சாத்துக்குடி, எலுமிச்சை, தக்காளி, ஆப்பிள், வெங்காயம், நெல்லிக்காய், கொய்யா, பப்பாளி போன்றவற்றில்

வைட்டமின் சி அதிகம். தினமும் மாலையில் ஒரு பழம் சாப்பிட்டுவர இந்த நோய் காணாமல் போகும்.

வெயிலில் விளையாடுங்கள்!

நாம் சாப்பிடும் உணவிலிருந்து கால்ஷியமும் பாஸ்பரஸும் குடலில் கிரகிக்கப்பட வேண்டுமானால், வைட்டமின் டி சத்து தேவை. வைட்டமின் டி சத்து சூரிய ஒளியிலிருந்து நமக்குக் கிடைக்கிறது. தினமும் அரைமணி நேரம் வெயிலில் நின்றால் அல்லது விளையாடினால் வைட்டமின் டி கிடைத்துவிடும்.



இந்தச் சத்து பால், முட்டை, மீன், மீன் எண்ணெய், இறைச்சி வகைகளிலும் கிடைக்கிறது.

நீரும் நெருப்பும்!

சூடாக உணவு சாப்பிடும்போது இடையிடையில் குளிர்ந்த தண்ணீர் அல்லது குளிர்பானங்களைக் குடிப்பது.

சூடாக உணவு சாப்பிட்டதும் ஐஸ்கிரீம் சாப்பிடுவது போன்ற பழக்கங்கள் நம்மில் பலரிடம் காணப்படுகிறது. சூடு - குளிர் என்று மாறி மாறிச் சாப்பிடும்போது பல் எனாமல் சிதைவடையும். பற்கள் சீக்கிரமே தேய்ந்துவிடும். பல் கூச்சம் ஏற்படும். குளிர்பானங்கள் குடிப்பதைத் தவிர்த்தால், இந்த நிலைமையைத் தடுக்கலாம். குளிர்பானங்களுக்குப் பதிலாக, சாதாரண வெப்பநிலையில் பழச்சாறுகளைச் சாப்பிடலாம்.


பற்களின் முதல் எதிரி!

பற்களின் நலனைப் பெரிதும் பாதிப்பது பற்சொத்தை. பற்சொத்தை ஏற்படுவதற்கு முக்கியக் காரணம், இனிப்பு உணவுகளை அதிகம் சாப்பிடுவது. குறிப்பாக, பற்களில் ஒட்டக்கூடிய இனிப்பு மாவுகள், பிஸ்கட்டுகள், சாக்லேட்டுகள், மிட்டாய்கள், ஐஸ்கிரீம், இதர பேக்கரி உணவுகள், பாக்கெட்டுகளில் அல்லது டின்களில் அடைக்கப்பட்டுள்ள ரெடிமேட் பலகாரங்கள் போன்றவற்றில் உள்ள சர்க்கரைப் பொருள் பல் இடுக்குகளில் ஒட்டிக்கொள்ளும்போது, வாயில் உள்ள பாக்டீரியாக்கள் அதனுடன் வினைபுரிந்து அமிலத்தைச் சுரக்கின்றன. இந்த அமிலம் பல் எனாமலை அரித்துப் பற்சொத்தையை உண்டாக்குகின்றன. ஆகவே அதிக இனிப்பு பற்களின் முதல் எதிரி என்பதை உணர்ந்து, அவற்றைக் குறைத்துக்கொள்ள வேண்டும். அல்லது இனிப்பு சாப்பிட்டதும் வாயை நன்றாகக் கழுவி சுத்தம் செய்ய வேண்டும். இதனால் பற்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்கலாம்.

சூயிங்கம் வேண்டாம்!

சூயிங்கம் மெல்லுவது இப்போது நாகரிகத்தின் அடையாளமாக உள்ளது. சர்க்கரை கலந்த சூயிங்கம் பல் எனாமலைக் கெடுக்கும். ஆகவே, சூயிங்கம் மெல்லுவதைத் தவிர்ப்பது நல்லது. ●

வாழ்த்துகள்!



விடையைச் சொல்; பரிசை வெல் - 32ல் கலந்து கொண்டு சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு, தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.

சரியான விடைகள் :

1) அகஸ்டஸ் பகின், 2) காமரூபம், 3) லைகா, 4) கிளாஸ்விங், 5) கொன்றை

பரிசு பெறுவோர் :

1.ஜி.பிரசாந்தி, புதுச்சேரி, 2.கே.லோகிகிருஷ்ணன், பூளவாடி, 3.டி.அனூப், திருச்சி, 4.நா.வைஷ்ணவி, வேலூர், 5.என்.அஞ்சனா, சுவாமிமலை, 6.எஸ்.ராகுல், கோவை, 7.மு.ஜெஸீமா பானு, திருநெல்வேலி, 8.கா.சிநேகா, சீர்காழி, 9.செ.சந்தோஷ், போளூர், 10.ஜி.ஜெய்சங்கர், தூத்துக்குடி

நான்கு சீடர்கள்!

கதை : சி.பி.செந்தில்குமார், சென்னிமலை படம் : பிள்ளை




சொர்க்கத்தின் பாதை!



'சொர்க்கத்தின் பாதை தான் வானவில்', என்கிறது கிரேக்கர்கள் புராணம். ஐரிஸ் தேவதையால் போடப்பட்ட பாதை இது என்கிறார்கள் கிரேக்கர்கள். நமது புராணத் தில் வானவில்லை 'இந்திர தனுஷ்'- அதாவது 'இந்திர னின் வில்' எனக் குறிப்பிட் டுள்ளனர். பூமியின் மேற்பரப் பில், காற்றில் உலவுகின்ற நீர்த்துளி களில், சூரிய ஒளி பட்டு எதிரொளிப்ப தால், வானவில் தோன்றுகின்றது. சில சமயங்களில் ஒளி இரண்டு முறை எதிரொளிக்கும். அப்போது இரட்டை வானவில்லாகத் தோன்றுகின்ற அதிசயக் காட்சியையும் காணலாம். இவ்வகை வானவில் 50° - 53° கோணத்தில் தெரியும். இந்த 'வானவில்' சனிக்கிரகத்தின் நிலவான டைட்டனிலும் தோன்றுகிறது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

* சந்திராயன்



நிலவில் நீர்!

நிலவில் இடம் வாங்கிக் குடியேற மனிதன் முனைந்துவிட்டான். காற்றில்லை என்ற கவலை மட்டும்தான். நீர் இருக்கிறது என்பதை - நிலவிலிருந்து கொண்டு வரப் பட்ட எரிமலைக் கல்லை ஆய்வு செய்த தன் மூலம் கண்டுபிடித்துவிட்டார்கள். கடந்த ஆண்டு இந்தியா அனுப்பிய சந்திராயன்- 1 செயற்கைக் கோள், நிலவில் பெருமளவு நீர் இருப்பதற்கான ஆதாரத்தை வழங்கி, உலகத்தையே ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இத்தகவலை நவம்பர் 13, 2009-ல் 'நாசா' ஆய்வு மையமும் உறுதி செய்தது. அடுத்து காற்றுக்கு என்ன செய்யலாம் என்று ஆராய்வார்களோ?

மேகங்கள் பலவிதம்!

மேகம், பூமிக்கு மட்டும் சொந்தம் என நினைக்க முடியாது. சூரிய மண்டலம்,

முனைவர் ஆகுரா



டான்டின் திசல்கோவ்ஸ்கி (konstantin tsiolkovsky). மனிதர்களைப் பல்வேறு கோள்களில் குடியமர்த்து வதன் மூலம், மனித இனம் தொடர்ந்து வாழ இயலும் என்னும் கருத்தை வெளி யிட்டவர் இவர், 1903ஆம் ஆண்டு வெளியிட்ட 'விண் வெளியைக் கண்டறிய உதவும் கருவிகள்' என்னும்



* கான்ஸ்டான்டின் திசல்கோவ்ஸ்கி



கோள்கள், நிலா எனப் பல்வேறு இடங் களைச் சுற்றி மேகம் காணப்படுகின்றது. வீனஸ் கிரகத்தில் உள்ள மேகம் 'சல்பியூரிக் அமில'த் துளிகளால் அமைந்துள்ளது. செவ்வாய்க் கிரகத்தில், 'நீர் ஐஸ்'களால் ஆன மேகங்கள் காணப்படுகின்றன. ஜூபிடர் மற்றும் சனிக் கிரகங்களில் 'அம்மோனியா மேகங்கள்' உள்ளன. யுரேனஸ் மற்றும் நெப்டியூன் கோள்களில் 'மீத்தேன் வாயு'வாலான மேகத் தொகுதி காணப்படுகிறது.

விண் பயணங்களின் தந்தை

'விண் பயணங்களின் தந்தை' என அழைக்கப்படுபவர் ரஷ்யாவின் 'கான்ஸ்

கட்டுரையில், பல்வேறு ராக்கெட் தொழில் நுட்பங்கள் பற்றியும்; இதற்கு எரி பொருளாக, திரவ ஆக்சிஜன் மற்றும் திரவ ஹைடிரஜன் நிரப்பப்பட்ட ராக் கெட்டுகள் பயன்படும் என்றும் தெரிவித் துள்ளார். இவரைப் பற்றி வியப்பான செய்தி ஒன்று : தமது ஒன்பதாம் வயதில் காது கேட்கும் திறனை இவர் இழந்தார். இதனால் பள்ளிக்கூடம் இவரை ஏற்க வில்லை. தாமே முயன்று கற்றார். பின்னர் விஞ்ஞானி, கணித ஆசிரியர், 500-க்கும் மேற்பட்ட அறிவியல் கட்டுரைகளை வெளியிட்டவர் எனப் பல பெருமை களைப் பெற்றவர் இவர். ●

தரணி காக்கும் இறைவன்!


கே.பி.பத்மநாபன்

நெடுங்கவிதை

கோழி கூவும் புலர்காலை
குடிசை விட்டுப் புறப்பட்டு
மேழி மாடு கூழுடனே
மெலிந்த உழவன் போகின்றான்.
பூழிச் சேற்றில் புதைந்தெழுந்து
புவியின் வாழ்வுக் குழைக்கின்றான்;
நாழி இரவு ஆனதன்பின்
நாடுகின்றான் தன்மனையை.

வானம் பொய்த்து விட்டாலும்
வாய்க்கால் நீரும் வற்றிடினும்
வேனல் நெருப்பில் வெந்தாலும்
வெட்டுக் கிளிகள் அழித்தாலும்
ஆன மட்டும் அவனுழைத்து
அகிலம் வாழப் பயிர்காப்பான்;
கூனல் மனதில் கொள்ளாமல்
குவலயம் தன்னைச் சுமக்கின்றான்.

தன்னம்பிக்கை தளராமல்
தரணி காக்கும் இறைவனவன்;
நன்னம் பிக்கை நாயகனாம்!
நமக்கு அவனே வழிகாட்டி!
அன்னம் ஊட்டும் அவன்சிறக்க
அனைத்துப் பொறுப்பும் நமக்குண்டு;
முன்னம் அவனைத் தொழுதிடுவோம்;
முழுதாய் அவனைக் காத்திடுவோம்!





பெயர் : ....

முகவரி : ....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்கவேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,

சென்னை - 600 032

கடந்த ஜனவரி மாதம் அறிவித்த 'சந்தோஷம் எது?' போட்டியில் ஏராள மானோர் பங்குபெற்றிருந்தார்கள். அவர்களில் எட்டு பேர் மிகச் சிறப் பாக எழுதியிருந்தார்கள். இவர்கள் அனைவருக்கும் புத்தகங்கள் பரிசாக அனுப்பி வைக்கப்படும். போட்டியில் பங்கேற்ற அனை வருக்கும் எங்கள் பாராட்டுக் கள். வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். தேர்வான சந் தோஷ அனுபவங்கள், வரும் இதழ்களில் பிரசுரமாகும்.

போட்டி முடிவு

தேர்வு பெற்றவர்கள் :

இர.பிரியதர்ஷினி, உ. எண் 1089, அரியலூர்

டி.எம். சுரேந்தர், உ. எண் 35, திண்டுக்கல்


அதிபன் அன்புமணி, உ. எண் 120, ஈரோடு

எம்.எஸ். ஷண்முகப்ரியா, உ. எண் 622, சேலம்

ஆர்.ஐஸ்வர்யா, உ. எண் 619, ஈரோடு

எம்.சிவா, உ. எண் 1245, ஓசூர்

ஏ. சுந்தரராஜன், உ. எண் 1158, திருக்கழுக்குன்றம்



ஆனந்தக்

ஒவ்வொரு வருடமும் தீபா வளி நேரத்தில், மாணவர்களின் பழைய ஆடைகளைப் பெற்று, அனாதை இல்லங்களுக்குக் கொடுப்பது எங்கள் பள்ளியின் வழக்கம்! அப்போது உடன்வர விரும்பும் மாணவர்களையும் அழைத்துச் செல்வார்கள். அப் படி நானும் ஒருமுறை சென்றேன்.

ஆசிரியர்கள் உடைகளை அளித்தவுடன், அங்கிருந்த சிறு வர்கள் உற்சாகமாகப் பெற் றுக் கொண்டார்கள். எங்களது பழைய ஆடைதான், துவைத்துச் சலவை செய்யப்பட்டிருந்தது. ஆனாலும் அவர்களைப் பொறுத்தவரை புத்தாடையின் குதூகலம் முகத்திலேயே தெரிந்தது.



கண்ணீர்!

ந. நிவேதா.
உ.எண் : 1153, ஈரோடு

அங்கிருந்தவர்களுள் இரு கைகளும் இல்லாத ஒரு சிறுவன், கால் விரலில் பென்சில் பிடித்து படம் வரைந்தான். அதைப் பார்த்த வினாடியில், எங்களுக்குள் ஏற்பட்ட உணர்வுகளை விவரிக்க வார்த்தைகளில்லை. எங்களையே வரைந்திருந்தான்! குரூப் ஃபோட்டோ எடுத்த மாதிரி இருந்தது. அந்தச் சிறுவன் வரைந்த ஓவியம், குறிப்பாக, எங்களோடு அவனும் நிற்பதுபோல அந்த ஓவியத்தை வரைந்திருந்தான். அதுதான் மிகப் பெரிய வியப்பை ஏற்படுத்தியது. அதேசமயம், உடலில் காணப்படுவது குறைபாடு அல்ல; மனத்தில் ஊக்கம் இல்லாமல் போவதே மிகப் பெரிய குறைபாடு என்ற எண்ணமும் ஏற்பட்டது.

அதைத் தொடர்ந்து, அங்கிருந்த முதியவர்கள் அனைவரும் "இறைவா மற்றவர்களுக்குத் தேடிச் சென்று உதவுகிற இந்தக் குழந்தைகள் அனைவரும் எல்லா நன்மைகளையும் பெறட்டும். உன்னுடைய கருணை அவர்கள் மேல் நிறையட்டும்" என்று பிரார்த்தனை செய்தார்கள்.



முதன்முதலாக அப்படியொரு சூழலைக் கண்டதும், பிரார்த்தனையைக் கேட்டதும் எங்கள் கண்கள் கலங்கின. கண்ணீர் வழிந்தது. 'சந்தோஷம் என்பது புத்தாடை, பண்டிகை, சுற்றுலா இவற்றால் மட்டும் வருவதல்ல; மற்றவர்கள் வாழ்த்தும் நிலையில் வாழ்வதே மிகப் பெரிய சந்தோஷம்' என்பதும் புரிந்தது. ●

புது வைத்தியர்?

அருணா ஷண்முகம்

இதைவிடச் சுலபமாக ஒரு குறுக்கெழுத்துப் புதிர் இருக்க முடியாது. இருந்தாலும், 'க்ளூ' தரோம். வாக்கியத்தைக் கவனமாய் படியுங்க. ஒவ்வொரு வாக்கியத்துக்குள்ளேயும் ஒரு 'ஊர்' மறைஞ்சிருக்கு. போதுமா? ஜமாயுங்க இனிமே!

மேலிருந்து கீழ்


1. செஞ்சிலுவைச் சங்க ஆண்டு விழா நடைபெறுகிறது. (3)
2. எல்லா வகையிலும் கடன் பட்டுக் கோட்டை மாதிரி கட்டிய வீடு கை நழுவிப் போய்விட்டது (7)
3. நமது ரைஸ் மில்லில் பவர் கட்டால் வேலை நின்றுவிட்டது (3)
4. ஆம் சுவாமி. மலைக் கோவிலில் தீபம் ஏற்றிவிட்டார்கள். (5)
5. நீ கொடுத்த பணத்தை எங்கோ வைத்துவிட்டுத் தேடுகிறேன். (2)
6. நான் போகாவிடில் வில்லி கோபித்துக் கொள்வாள் (3)

கீழிருந்து மேல்

7. திருச்சிற்றம்பலவாணன் அருளால் செல்வத்துக்குக் குறைவில்லை (4)
8. சுஷ்மிதா சென்னை எனக்குப் பல ஆண்டுகளாகத் தெரியும் (3)
9. பள்ளிக்கு மிக அருகிலேயே பெரிய குளம் ஒன்று இருக்கிறது (6)
10. கலங்காதிரு. மலையப்ப சாமி நம்மைக் கைவிட மாட்டார் (4)
11. காய்ந்த நெல்லை மூட்டையாகக் கட்டி கடைகளுக்கு அனுப்பு (3)
12. அதோ பார் வயலோரத்தில் ஏர். வாடி, நாமும் உழுது பழகுவோம் (4)
13. நோய் குணமாக ரஞ்சிதம் பரம்பொருளை வேண்டிக் கொண்டாள் (6)
14. அடேயப்பா! கையில் காசிருந்தா மனசில்தான் என்ன உற்சாகம் (2)
15. கலர் விளக்குகளின் வெளிச்சத்தில் ஜொலித்தது கோவில். பட்டி தொட்டி எங்கும் திருவிழாக் கொண்டாட்டம்! (6)



ஜாலி டைம்



இடமிருந்து வலம்

8. சித்தாள் வீசி எறிந்த செங்கல் பட்டு, கொத்தனாருக்குப் பலத்த காயம் (7)

11. கை தவறிய ஒரு பாட்டில் நெய், வேலியில் போய் விழுந்தது (4)

16. ரேஷனில் சர்க்கரை தருகிறார்களாம். நாமும் பை எடுத்துக் கொண்டு போகலாம் (3)

17. ஏற்கெனவே லூர்து மேரி அறிந்த விஷயந்தான் இது. (3)

18. ச்சே! 'லம்ப்பா' வரவேண்டிய பணம். மிஸ்ஸாயிட்டுது. (3)

19. நம்ம ஊர் பால்கோவாதானா இது? அமிர்தமாயிருக்கிறதே. (2)

20. லிங்கம் பம்பரம் விளையாடிக் கொண்டிருக்கிறான் (4)

21. இன்று மாலை ஐந்து மணிக்கு தேனீர் விருந்து. மறந்துவிடாதே (2)

22. சரிதான் போடி! சரியான அசடு நீ (2)

வலமிருந்து இடம்

23. பாம்பு, பாம்பு! அடித்துக் கொல். சுத்தாதே! ஓடிடப் போகுது (5)

24. பொய் சொல்லக் கூடாது. திருடக் கூடாது என்பதைத்தான். நா, கைச் சுத்தம் தேவை என்று நமது குரு சொல்கிறார். (2)

25. ஒரு அங்குல நீள நா, கூர்வாளை விடக் கொடிய ஆயுதம் (3)

26. குடும்பம் உடன் குடியிருக்கிறது. (5)

27. புது வைத்தியர் ரொம்பவும் கைராசிக்காரர்! (3)

விடைகள் :

மேலிருந்து கீழ் : 1.செஞ்சி, 2.பட்டுக்கோட்டை, 3.மதுரை, 4.சுவாமி மலை, 5.கோவை, 6.டில்லி,

கீழிருந்து மேல் : 7. திருச்சி, 8.சென்னை, 9.பெரியகுளம், 10.திருமலை, 11.நெல்லை, 12.ஏர்வாடி, 13.சிதம்பரம், 14.காசி, 15.கோவில்பட்டி

இடமிருந்து வலம் : 8.செங்கல்பட்டு, 11.நெய்வேலி, 16.மும்பை, 17.வேலூர், 18.சேலம், 19.கோவா, 20.கம்பம், 21.தேனி, 22.போடி

வலமிருந்து இடம் : 23.கொல்கத்தா, 24.நாகை, 25.நாகூர், 26.உடன்குடி, 27.புதுவை

"**சா**ப்பாடு ரெடி!"

மனைவியின் குரல் கேட்டதும் இரா ரெம்சென் (Ira Remsen) வாசித்துக்கொண் டிருந்த செய்தித்தாளை மடித்துவைத்தார். நிதானமாக எழுந்து சாப்பாட்டு மேஜைக்கு வந்தார். ''இன்னிக்கு என்ன டின்னர்?''

''ப்ரெட் ரோல்ஸ்!'' என்றார் அவர் மனைவி.

''ரோல்ஸ்'' என்றால் ரொட்டியை உருட்டித் தயாரிக்கிற ஒரு பண்டம். அதற்குள் காரசாரமாக ஏதாவது மசாலா சமாசாரங்களைப் பொதித்து வைத்திருப் பார்கள். அதை ரொட்டியுடன் சேர்த்துச் சாப்பிடும்போது ஒரு வித்தியாசமான சுவை கிடைக்கும்.



ஆனால் இன்றைக்கு, அந்த ரொட்டி காரமாக இல்லை. லேசாகத் தித்தித்தது.

ரெம்செனுக்குக் குழப்பம்.

''என்னாச்சு?''

''இந்த ப்ரெட் இனிக்குது'' என்றார் ரெம்சென். ''ரொட்டி தயாரிக்கும்போது தெரியாம சர்க்கரையைக் கொட்டிட்டியா?''

''இல்லையே'' என்றபடி தன்னுடைய தட்டில் இருந்த ரோல்லைக் கடித்துப்பார்த் தார் அவர் மனைவி. ''என்னங்க சொல் றீங்க? என்னோட ப்ரெட் இனிக்கலையே! வழக்கம்போலதானே இருக்கு?''

ரெம்சென் மீண்டும் ஆச்சர்யத்தில் மூழ்கினார். ஒரே நேரத்தில் தயாரித்த இரண்டு ரொட்டிகள், ஒன்று இனிக்கிறது. இன்னொன்று இனிக்கவில்லை. அப்படி யென்றால் என்ன அர்த்தம்?

சட்டென்று தன்னுடைய கை விரல்களைப் பார்த்தார் ரெம்சென். அவற்றை வாயிலிட்டுச் சுவைத் தார். கொஞ்சம் இனிப்பு, கொஞ்சம்

* இரா ரெம்சென்





தித்திக்குதே..!

கசப்பு என்று விநோதமான ஒரு சுவை!

ஆக, இந்த இனிப்பு ரொட்டியிலிருந்து வரவில்லை. என்னுடைய கை விரல்களில் ஒட்டியிருக்கிறது. அது எப்படி? இரா ரெம்சென் ஓர் ஆராய்ச்சியாளர். நிலக் கரியிலிருந்து சில வேதிப்பொருள்களைப் பிரித்து எடுக்கிற ஆய்வுகளில் ஈடுபட் டிருந்தார்.

ஆனால், அவர் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த பொருள்களில் எவையும் இனிப்பாக இருக்காது. அப்படியானால், இந்த இனிப்பு எங்கிருந்து வந்தது? ரெம்செனுக்குப் புரியவில்லை. குழப்பத்தோடு தூங்கப்போனார்.

அடுத்த நாள் காலை, ரெம்சென் ரொம்பச் சீக்கிரமாக எழுந்துவிட்டார். பரபரவென்று குளித்துத் தயாராகித் தன்னுடைய ஆராய்ச்சி சாலைக்கு ஓடினார்.

அங்கே பலவிதமான ஜாடிகள். ஒவ்வொன்றிலும் வெவ்வேறு நிறப் பொடிகள், திரவங்கள், கலவைகள். இதில் அந்த இனிப்பை எங்கே தேடுவது?

'நேற்றைக்கு நான் எந்தெந்தப் பொருள்களைப் பயன்படுத்தினேன்? அவற்றை மட்டும் தனியே பிரித்து வைத்தால் ஏதாவது க்ளூ கிடைக்குமா?'

முந்தின நாள் என்னென்ன ஆராய்ச்சிகள் செய்தோம் என்று யோசித்து. அதில் உபயோகப்படுத்தப்பட்ட இரசாயனங்களை மட்டும் ஓரமாக எடுத்துவைத்தார்.

சிறிது நேரத்துக்குள், அவருடைய மேஜையில் முப்பது, நாற்பது வேதிப் பொருள்கள் சேர்ந்துவிட்டன. இத்தனை கூட்டத்தில் அந்த இனிப்பு சமாசாரம் எங்கே? அதை எப்படித் துப்பறிவது?

என்.சொக்கன்

ரெம்சென் யோசித்தார். இனிப்புச் சுவையை மோப்பம் பிடிக்கக்கூடிய உள வாளி, வேறு யாரும் இல்லை. நம்முடைய நாக்குதான்!

அதாவது, இங்குள்ள ஒவ்வொரு பொருளையும் தனித்தனியே எடுத்துச் சுவைத்துப்பார்க்கவேண்டும். அந்த இனிப்பு எங்கே ஒளிந்திருக்கிறது என்று இதன்மூலம் சுலபமாகக் கண்டுபிடித்து விடலாம்.

ஒரே ஒரு பிரச்னை; இந்த வேதிப் பொருள்களில் பாதி, மனித உடலுக்கு ஒத்துவராதவை. சில, விஷமாகக்கூட இருக்கலாம். அவற்றையெல்லாம் சாப் பிட்டு வைத்தால் அவர் உயிருக்கே ஆபத்து வந்துவிடும்!

இரா ரெம்சென் அந்த ஆபத்தைச் சந்திக்கத் தயாராக இருந்தார். 'ஏதாவது பிரச்னை வந்தா அப்புறமாப் பார்த்துக் கலாம், இப்போதைக்கு அந்த இனிப்புப் பொருளைக் கண்டுபிடிச்சே தீரணும்' என்று தன்னுடைய விஷப்பரீட்சையைத் தொடர்ந் தார்.

இப்படிப் பல பொருள்களைச் சுவைத் துப் பார்த்த பின்னர், நேற்று இரவு அவர் ருசித்த அதே இனிப்பு + கசப்பு கலவை அவருக்குத் திரும்பக் கிடைத்துவிட்டது. மகிழ்ச்சியில் ஆனந்தக் கூத்தாடினார் ரெம்சென்.

அது என்ன ரசாயனம்?

அதன் பெயர் ஓ-பென்சோயிக்-சல் ஃபமைட். வேறு ஏதோ ஆராய்ச்சியின் நடுவே எதேச்சையாகச் சிக்கிய செயற்கை இனிப்புப் பொருள் அது.

ரெம்சென் அந்தத் தித்திப்பு ரசாயனத் துக்குச் 'சாக்கரின்' என்று பெயர் வைத்தார்.

கரும்பிலிருந்து தயாரிக்கப்படும் இயற் கைச் சர்க்கரைக்கு, ஒரு நல்ல மாற்றுப் பொருளாக இது அமைந்தது. அதன்பிறகு, இதேபோல் இன்னும் பல செயற்கை இனிப்புப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட் டன. சர்க்கரை நோய் கொண்டவர்கள், உடல் எடை குறைக்க விரும்புகிறவர் களுக்கெல்லாம் இவை மிகப் பெரிய வரப்பிரசாதமாக இருக்கின்றன.

ஆனால் இத்தனைக்கும் ஆரம்பம் எது என்று பார்த்தால், ரெம்சென் செய்த ஒரு சிறிய தவறுதான். அன்றைக்கு ஆராய்ச்சி சாலையில் வேலை செய்து முடித்தபிறகு, அவர் தம்முடைய கைகளைக் கழுவ மறந்ததால்தான், ஓ-பென்சோயிக்- சல்ஃப மைட் அவருடைய விரல்களில் ஒட்டிக் கொண்டது; பின்னர் அவரது உணவிலும் ஒட்டிக்கொண்டது; திடீர் இனிப்பாகத் தலைகாட்டி ஆச்சர்யம் அளித்தது.

அதைக் கண்டுபிடிக்க, தன் உடம் பையே பரிசோதனைக்கூடமாக மாற்றிக் கொண்டுவிட்ட ரெம்சென் இன்னொரு ஆச்சரியம்!

இப்படி அறிவியலுக்காகத் தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணம் செய்து கொண்ட ஆராய்ச்சியாளர்களால்தான், இந்த உலகம் ஒவ்வொரு நாளும் சிறப்பானதாக முன்னேறிக் கொண்டிருக்கிறது! ●

'ஏதாவது பிரச்னை வந்தா அப்புறமா பார்த்துக்கலாம், இப்போதைக்கு அந்த இனிப்புப் பொருளைக் கண்டுபிடிச்சே தீரணும்'


கோகுலம் டைஜஸ்ட்

இந்த டைஜஸ்டில்...




மீன்களுக்கு செதில்கள் இருப்பது ஏன்?

மீன்கள் துடுப்புகளின் உதவியால் நீந்துகின்றன. செவுள்களால் சுவாசிக் கின்றன. அப்படியானால், செதில்கள் எதற்கு? மீன்களின் சருமம் மென்மை யானது. அந்தச் சருமத்துக்கு பாதுகாப் பாகவும், நோய்த் தொற்று ஏற்படாமல் தடுக்கவும், நீந்தும்போது இலகுவாகத் திரும்பவும் செதில்கள் பயன்படுகின்றன. தவிர இவற்றைக் கொண்டு மீன்களின் வளர்ச்சி மற்றும் அந்த மீனின் வயதைப் பற்றி அறிய முடியும். (இந்த செதில் களிலும் நான்கு வகையான தன்மைகளைக் காண முடிகிறது. தவிர, எல்லா மீன் களுக்கும் செதில் இருக்காது.)




கிரகணங்கள் ஏற்படுவது ஏன்?

பூமி தன்னைத்தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறது. பூமியினுடைய துணைக்கோளான சந் திரனும் அவ்வாறே செய்கிறது. சில சமயங்களில் பூமிக்கும் சூரியனுக்கு மிடையே சந்திரன் வந்துவிட நேர்கிறது. அப்போது சூரியன் மறைக்கப்படுவதால் சூரிய கிரகணம் ஏற்படுகிறது. சந்திரன் சூரியனை முழுவதுமாக மறைத்தால் பூரண கிரகணம் ஏற்படும். இவ்வாறு எப்போதாவதுதான் நேரும். மற்ற சமயங்களில் குறை கிரகணமே ஏற்படும். இதேபோல் சூரியனுக்கும் சந்திரனுக்கு மிடையே பூமி வர நேரும்போது அது சந்திரனை மறைத்துவிடுவதால் சந்திர கிரகணம் உண்டாகிறது. சூரிய கிரகணம் அமாவாசையன்றும் சந்திர கிரகணம் பௌர்ணமியன்றும்தான் ஏற்படும்.




பாம்பு சட்டையை உரிப்பது ஏன்?

பாம்பு தன்னுடைய தோலை உரிப் பதைத்தான், சட்டை உரிப்பதாகக் கூறு றோம். பாம்பு வளரும்போது, அதற்கேற்ப தன் மேல்தோலும் வளர்வதில்லை. னவே, புதிய தோலை உண்டாக்கிக் காண்டு அவ்வப்போது பழைய தோலை ட்டையைக் கழற்றுவது போல உரிக்க வண்டியுள்ளது. சில பாம்புகள் ஆண்டில் ிருமுறை இவ்வாறு செய்யும். ஆறுமுறை தாலுரிக்கும் பாம்புகளும் உள்ளன. உரிக்க வேண்டிய நேரம் நெருங்கும்போது, பாம்பு அதன் தோலின் மேற்புற நிறத்தையும் பளபளப்பையும் இழந்துவிடும். அப்போது அடியில் புதிய தோல் உருவாகிக் கொண் டிருக்கும். அது முழுவதுமாக உருவானதும், பாம்பு தன் உடலில் எண்ணெய் போன்ற திரவத்தை சுரக்கச் செய்யும். பழைய தோலைப் புதிய தோலிலிருந்து கழற்றிவிட இது உதவுகிறது. பின்பு பாம்பு தன் தாடையை பாறையில் தேய்த்து வாயருகே உள்ள சருமம் கிழியும்படிச் செய்யும். பிறகு, தலையை அதற்குள்ளிருந்து வெளிப்படுத்திக் கொண்டு பாறையிடுக்கில் புகுந்து, பழைய மேல்தோல் உடலிலிருந்து விடுபடுமாறு தேய்த்தவாறு வெளிப்படும். இவ்வாறு செய்வதால் அதன் முழுத் தோலும் கழன்று வந்துவிடும்.


ஆர்.ஆஸிக் அகமது,
உ.எண் 1157, கம்பம்



சுட்டீஸ் கைவண்ணம்!



எம்.சரவணன்,
ஐந்தாம் வகுப்பு,
ஸ்ரீ சங்கர
வித்யாலயா மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி,
சென்னை

ஏ.தி.ஆதித்பிரணவ்,
உ. எண் 1388, இராணிப்பேட்டை





ஏ.ஜே.கிராலிசா,
ஐந்தாம் வகுப்பு,
ஆக்ஸ்போர்டு மெட்ரிக்
பள்ளி, திருநெல்வேலி

ஏ.கே.ஜியா
நான்காம் வகுப்பு, சா
மெட்ரிக். பள்ளி, செ

எஸ்.அனிருத், நான்காம் வகுப்பு, லாவண்டர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை







* இவர் பிரேசில் நாட்டில், 1940ஆம் ஆண்டு பிறந்தவர்.
* இவரது தந்தையும் கால் பந்தாட்ட வீரர்.
* இவரது இயற்பெயர் 'எடிஸன் அரன்டிஸ்.' (Edison Arantes do Nasimento)
* இவர் தமது 17வது வயதில் பிரேசில் கால்பந்தாட்ட அணியில் சேர்ந்தார்.
* பிரான்ஸுக்கு எதிராக விளை யாடியபோது இவர் 'ஹாட்ரிக்' முறையில் 3 கோல் போட்டார்.
* இவரது பயிற்சியாளரின் பெயர் வால்டிமர் டி பிரிட்டோ. (Waldemar de Brito)
* 1967ஆம் ஆண்டு, நைஜீரியாவில் நடந்த உள்நாட்டுப் போர், இவரது விளையாட்டைப் பார்ப்பதற்காக 48 மணி நேரம் நிறுத்தி வைக்கப்பட்டது.
* இவரின் முயற்சியால் பிரேசில் அணி 1958 - 1962 மற்றும் 1970ஆம் ஆண்டுகளில் உலகக் கோப்பையைக் கைப் பற்றியது.



* இவர் போட்ட கோல்கள் 1,284.
* இவர் 1977ஆம் ஆண்டு ஒரு காட்சி விளையாட்டில்' கலந்து கொண்டதோடு விளையாட்டில் இருந்து ஓய்வு பெற்றார்.

இவர் யார்?

- என்.சம்பத்குமார், ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலய உயர்நிலைப் பள்ளி, கோவை

[illegible] : [illegible]



போரை நிறுத்திய வீரர்!

மாடிகள் எவ்வளவு?

1) லண்டன் மாநகரில், உயரமான ஓட்டல் ஒன்றில், பதினொன்றாவது மாடியில் தங்கியிருந்தார் ஜெகன். கடைசி மேல் மாடியில் தங்கியிருந்த நண்பர் ஒருவரும் கீழ்த்தளத்தில் தங்கியிருந்த நண்பர் ஒருவரும் அவரைச் சந்திக்க வந்தார்கள். முதலாமாவர் 'உம்மைச் சந்திக்க பதினொரு மாடிகள் இறங்கி வந்தேன்' என்றார். உடனே இரண்டாமவர் 'நான் பதினொரு மாடிகள் ஏறி வந்தேன்' என்றார். அப்படியானால் அந்த ஓட்டலில் எத்தனை மாடிகள் உள்ளன?

2) எண்ணெய் வணிகர் ஒருவருக்கு மூன்று மகன்கள் இருந்தார்கள். திடீரென்று அந்த வணிகர் இறந்து போனார். அவர் எழுதி வைத்த உயிலைப் படித்தார்கள். அதில் 'என் மகன்களுக்காக ஏழு பீப்பாய் நிறைய எண்ணெய்யும், ஏழு பீப்பாய் பாதி எண்ணெய்யும், ஏழு காலி பீப்பாய்களையும் வைத்துள்ளேன். என் மகன்கள் மூவரும் ஒரே எண்ணிக்கையிலான முழு, அரை, காலி பீப்பாய்களைப் பெற வேண்டும். இது என் ஆசை' என்று இருந்தது. அவர் ஆசை நிறைவேற வழி கண்டுபிடியுங்கள்.

- ஆர்.ஆசிக் அகமது,
உ. எண் 1157, கம்பம்

3) வானம் என்பதைக் கடல் என்றும், கடல் என்பதைத் தண்ணீர் என்றும், தண்ணீர் என்பதைக் காற்று என்றும், காற்று என்பதை மேகம் என்றும், மேகம் என்பதை ஆறு என்றும், ஒருவன் கூறுகிறான். இப்பொழுது அவனுக்குத் தாகம் எடுக்கிறது. அவன் எதைக் குடித்து, தாகத்தைப் போக்கி கொள்வான்?

- ஏ.ஸ்ரீபாரதி, உ. எண் 919
செயிண்ட் ஜோசப் பெண்கள்
மேல்நிலைப் பள்ளி, கும்பகோணம்

4) காலையில் 2 வேஷ்டி, 2 பனியன், 2 துண்டு ஆக ஆறு துணி துவைத்தேன். ஒரு துணி உலர மூன்று மணி நேரம் ஆகிறது. ஆறு துணியும் உலர எத்தனை மணி நேரம் ஆகும்.



5) ஒரு 13 அடி உயரக் கம்பம். அதில் ஒரு பல்லி ஏறுகிறது. அது நிமிஷத்துக்கு மூன்று அடி ஏறும். இரண்டு அடி சறுக்கும். அப்படியானால் உச்சிக்குப் போக, அந்தப் பல்லிக்கு எத்தனை நிமிஷங்கள் ஆகும்?

- செ.ச.பிரபாகரன்
உ. எண் 1193, ஆறாம் வகுப்பு
அரசு உயர்நிலைப் பள்ளி, பல்லடம்

6) பொருந்தாதது எது?

i) அ) ரோஜாப்பூ ஆ) மல்லிகை இ) தாமரை ஈ) மந்தாரை உ) சாதி மல்லிகை

ii) அ) ஓடை ஆ) நதி இ) கால்வாய் ஈ) சிற்றாறு உ) குளம்

iii) அ) கல்கத்தா ஆ) இந்தியா இ)ஹைதராபாத் ஈ) சென்னை உ) மும்பாய்

- ம.விவேக், குட்டம்

7) நான்கு நான்குகளைக் கூட்டியோ, பெருக்கியோ கழித்தோ, வகுத்தோ இருபது கொண்டு வர வேண்டும். எப்படி?

8) 45 - 45 = 45. எப்படி?

- த.பிரகல்யா, பத்தாம் வகுப்பு, உ. எண் 318, பொன்னையா இராமஜெயம் பொதுப் பள்ளி, தஞ்சாவூர்





விடைகள் :

1) 21 மாடிகள்

2) நான்கு அரைப் பீப்பாய் எண்ணெயை இரண்டு முழுப் பீப்பாய் எண்ணெயாக மாற்றவேண்டும். இதனால், ஒன்பது முழு பீப்பாய் எண்ணெயும், ஒன்பது காலி பீப்பாய்களும் ஆகும். அதை ஒவ்வொருவருக்கும் மூன்று முழு பீப்பாய் எண்ணெய் ஒரு அரை பீப்பாய் எண்ணெய் மூன்று காலிப் பீப்பாய்கள் என்று பகிர்ந்து கொள்ளலாம்.

3) காற்று

4) அதே 3 மணி நேரம்தான்.

5) 11 நிமிஷம்

6) i) இ, ii) உ, iii) ஆ

7) 4 ÷ 4 = 1 + 4 =
5 x 4 = 20

8) 987654321 = 45
- 123456789 = 45
864197532 = 45

(வரிசையில் உள்ள எண்களை 9+8+7... என்று கூட்டினால்)

மிகப் பழைமையான வரலாற்றுச் சிறப்புடையது எங்கள் ஊரான சேலம்! 'சைலம்' என்கிற வடமொழிச் சொல்லின் திரிபுதான் சேலம் என்றும் சொல்கிறார்கள். 'சைலம்' என்றால் மலை என்று பொருள். அதற்கு ஏற்றாற்போல, இவ்வூரைச் சுற்றி கல்வராயன் மலை, சேர்வராயன் மலை, பச்சை மலை, கஞ்சமலை... என்று பலப்பல மலைகள் அமைந்துள்ளன.

தொல்லியல் சிறப்பு வாய்ந்தது எங்கள் ஊர். கற்கால மனிதர்கள் பயன்படுத்திய கோடரி, கத்தி, பானை... போன்றவை, இங்கே கண்டெடுக்கப்பட்டுள்ளன. கி.பி. முதல் நூற்றாண்டில், ரோம் சக்கரவர்த்தியாக விளங்கிய Tiberices Claudies Nero



* மேட்டூர் அணை

(37-68)வின் வெள்ளிக் காசுகள், சேலம் அருகிலுள்ள கோனேரிப்பட்டியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

சங்க காலத்தில் அதியமானைத் தொடர்ந்து, பாண்டியர், பல்லவர், சோழர், ஹொய்சாளர்... என்று ஆங்கிலேயர் காலம் வரை பலரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த பகுதி இது.

இந்திய அளவில் சேகோ மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியில் முதலிடம் பெறுவது சேலம். இங்குள்ள கொண்டாலம்பட்டி, நங்கவள்ளி, வனவாசி... உள்ளிட்ட பகுதிகளில் தயாராகும் சேலை, சரிதார் போன்ற ஜவுளிகள்



* ஏற்காடு ஏரி



* தாவரவியல் பூங்கா, ஏற்காடு


இந்தியா முழுதும் விற்பனையாகின்றன. சேலம், செவ்வாய்ப்பேட்டை, சிவதாபுரம் பகுதிகளில் தயாராகும் வெள்

ளிக் கொலுசுகள் பெரும் புகழ்பெற்றவை.

கனிம வளம் என்றால், மாக்னசைட் மற்றும் பாக்சைட்







* ஆத்தூர் கோட்டை



'மல்கோவா' மாநகர்!

போன்றவை ஓமலூர் பகுதியில் பெருமளவில் கிடைக்கின்றன.


சேலம் கோட்டை மாரியம்மன், தாரமங்கலம் கைலாசநாதர், பேளூர் தான்தோன்றி ஈஸ்வரர் போன்றவை சேலம் மாவட்டத்தின் புகழ்மிக்க சில ஆன்மிகத் தலங்கள். சங்ககிரி மற்றும் ஆத்தூரில் அமைந்துள்ள பழங்காலக் கோட்டைகள் வரலாற்றுச் சிறப்புடையவை.


'ஏழைகளின் ஊட்டி' எனப்படும் ஏற்காடு, சேர்வராயன் மலையில் அமைந்துள்ள சுற்றுலாத் தலம். ஏரி, தாவரவியல் பூங்கா, பகோடா பாயிண்ட்... என்று இங்கு பார்க்கத் தகுந்த இடங்கள் பல. இந்த வரிசையில் மேட்டூர் அணையையும் சொல்லலாம். நீர் நிரம்பிய நிலையில் கடல் போலத் தோற்றமளிக்கும் மேட்டூர் அணையை ஒட்டி, அழகிய பூங்கா ஒன்றும் அமைந்துள்ளது.

கஞ்சமலை அடிவாரத்தில் அமைந்துள்ள சேலம் இரும்பு ஆலை, சங்ககிரியில் சிமெண்ட் ஆலை, மேட்டூரில் மின் உற்பத்தி என தொழிலகங்களாலும் சிறப்புடையது எங்கள் ஊர். இவையனைத்தையும் தன்னுள் கரைத்துக் கொண் டது சேலத்துக்கே உரிய 'மல்கோவா' மாம்பழம்! உலகெங்கும் ஏற்றுமதியாகும் இந்த மாம்பழத்தைத்தான், பள்ளிப் பருவத்திலேயே 'மாம்பழமாம் மாம்பழம்' என்று குழந்தைக் கவிஞரின் பாடல் மூலம் கற்பித்துவிடுகிறார்களே!

மந்திரக் கிணறு!

கதை : எஸ்.சுதாகர், உ.எண் : 970, நம்பியூர் படம் : பிள்ளை




ஏன் முடியாதுங்கிறே?
வானில நான் இருக் கேனே!
முட்டாள்... இப்பப் பாரு...
எப்படி என் ஐடியா?
சூப்பர். நீதான் அறி வாளி!
ஒன்.. டூ.. த்ரீ... ஜம்ப்! அம்மா தாவிட் டேன்.
கிணற்றினுள்...
ஏ, கிணறே! எனக்குப் பசிக் குது. இறைச்சி கொடு!
என்ன அண்ணா, சாப்பாடு கிடைச்சுதா?
ஒண் ணுமே கிடைக்கலை.
கிடைக்காது. இது மந்திரக் கிணறே இல்லையே!
ஆ?

✱ நம் உடலில் உள்ள இரண்டு கட்டை விரல்கள்தான் மூளையை அதிகமாக வேலை வாங்குகின்றன.

✱ ஆகஸ்ட் மூன்றாம் நாள் நண்பர்கள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

✱ நள்ளிரவில் நாம் தூங்கும்போது 8 மில்லி மீட்டர் வளர்கிறோம். பகலில் அதே அளவு சுருங்கிவிடுகிறோம்.

✱ சீனாவில், ஒரு கடையில் இயேசு சிலுவையில் அறையப்பட்ட சின்னம் இருந்தால், அது அடகுக் கடையாக இருக்கும் என்கிறார்கள்.

✱ பொருளாதாரத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் 'ஆடம் ஸ்மித்'.

- ஜி.ரம்யா,
ஏழாம் வகுப்பு, சாரதா
மெட்ரிகுலேஷன் பள்ளி, செஞ்சி

✱ கொம்பில் கண் உள்ள பிராணி நத்தை.

✱ ஒரு குதிரைத் திறன் என்பதன் மதிப்பு 746 வோல்ட்ஸ்.

✱ பறவைகள் பற்றிய படிப்பின் பெயர் Ornithology.

✱ ஒருமுறை எழுதி பலமுறை வாசிக்கும் நினைவு முறைக்கு Worm என்று பெயர்.

✱ 'காஸ்மாலஜி' என்பது பிரபஞ்சத்தைப் பற்றிய ஆராய்ச்சி.

- ந.பிருந்தா, உ. எண் 1098, ராஜ்
மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
மயிலாடுதுறை



✱ 'யாக்' எருமை



✱ 'சைப்ரஸ்' மரம்



✱ 'கிப்பான்' குரங்கு

ஐந்து கோடி இலைகள்!

✱ உலகின் மிக நீளமான பாலம் ஜப்பானில் உள்ளது. இந்த பாலத்தின் பெயர் 'ஆகாஷி காய்கியோ'. (Akashi Kaikyo) இதன் நீளம் 4 கி.மீ. இதனைக் கட்டி முடிக்க சுமார் 12 வருடங்கள் பிடித்தன.

✱ தற்போது நாம் அதிகமாகப் பயன்



படுத்தும் பொருட்களில் ரப்பருக்கும் மிக முக்கியமான பங்கு உண்டு. இதன் தாவர வியல் பெயர் 'ஹீவியா பிரேசிலியன்சிஸ்' (Hevea Braziliensis).

✸ குரங்கு வகைகளைச் சேர்ந்த கிப்பான், தென்கிழக்கு ஆசியாவிலுள்ள மலைப்பிரதேசங்களில் வாழ்கின்றன. இந்த வகைக் குரங்குகள் எப்போதும் 6 முதல் 10 குரங்குகள் வரையிலான கூட்டமாகத் தான் வசிக்கும். மரங்களின் உச்சியில் வாழும். அதிகாலையில் சப்தமிடும் பழக்கம் கிப்பான் வகை குரங்குகளுக்கு உண்டு.

- அ.அன்றில்,
ஏழாம் வகுப்பு,
சாரதா
மெட்ரிகுலேஷன்
பள்ளி, செஞ்சி

✸ சிட்டுக்குருவியின் உடலில் 1500 முதல் 3500 இறகுகள் வரை இருக்கும். அன்னப் பறவையின் உடலில் அதிகபட்சம் 25000 இறகுகள் இருக்கும்.


✸ 'ஆகாஷி காய்கியோ' பாலம்



✸ உலகிலேயே அதிக இலைகள் கொண்ட மரம் சைப்ரஸ் மரம்தான். இதில் 4 முதல் 5 கோடி வரை இலைகள் இருக்கும்.

✸ திபெத்தில் வசிக்கும் 'யாக்' எருமையின் பால் இளஞ்சிவப்பாக இருக்கும்.

- ஆர்.ரம்யா, பத்தாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப் பள்ளி,
நம்பியூர்

தினேஷுக்குப் பரிசு!

"இந்த வருஷம் எப்படியும் நான் முதல் பரிசு வாங்கியே தீருவேன்" என்றான் தினேஷ்.

"போடா எனக்கு நம்பிக்கை இல்லை. வழக்கம்போல அந்தப் பிரவீன்தான் வாங்கப் போறான்" என்று அலட்சியமாகச் சொன்னான் கார்த்திக்.

தினேஷ் எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவன். நல்ல திறமைசாலி. சிறுவர் பத்திரிக்கைக்கு கதைகள் எழுதி அனுப்புவான். அவை வெளியாகியுள்ளன. அதே போல் போட்டிகளில் பங்கேற்று, கதையை வாசித்துக் காட்டி, பள்ளி சார்பில் பலமுறை பரிசுகளைப் பெற்றுள்ளான். சமீபகாலமாக அந்தப் பரிசைப் பெறுபவன் பிரவீன். அவன், வேறு பள்ளியிலிருந்து, தினேஷ் படிக்கும் பள்ளிக்கு வந்து சேர்ந்தவன். தினேஷின் முதலிடம் தற்போது பிரவீன் வசம். அதனால் பிரவீனைக் கண்டாலே தினேஷுக்குள் பொறாமைத் தீ! 'இந்த முறை ஆண்டு விழாவில் எப்படியும் முதல் பரிசு பெற வேண்டும்' என்று ஓடியது தினேஷின் சிந்தனை.



போட்டிக்கு இன்னும் இரு தினங்களே இருந்தன. அப்போது உணவு இடைவேளை நேரம்! அனைவரும் சென்ற பிறகு பிரவீனின் புத்தகப் பையை ஆராய்ந்தான் தினேஷ். உள்ளே கதை இருக்கிறதா என்று தேடினான். அறிவியல் புத்தகத்தில் நான்காக மடித்த ஒரு காகிதம் இருந்தது. அது, பிரவீன் எழுதிய கதைதான். அதை தன் நோட்டில் பிரதி எடுத்துக் கொண்டான்.

ஆண்டு விழா கதைப் போட்டி!

'பரிசுக்குரிய கதை நம் கையில்' என்ற நம்பிக்கையுடன் இருந்தான் தினேஷ். வரிசைப் பட்டியலில் முதலாவது



திநேஷ்தான். 'முதல் கதையை வாசிப்பவர் திநேஷ்' என்று அறிவித்ததும், உற்சாகமாக மேடையேறினான்.

பிரவீனின் கதையைப் படித்தான். கைதட்டல்கள் பறந்தன. அவனுக்கு அடுத்தது பிரவீனின் முறை! திநேஷ் படிக்க ஆரம்பித்ததும் பதற்றமான பிரவீன், மேடையில் அசரவில்லை.

தன்னுடைய கதையை, திநேஷ் கவர்ந்து கொண்டு அவனுடைய கதைபோல படித்ததையே ஒரு கதையாகச் சொன்னான்! திநேஷ் என்று பெயரைச் சொல்லாமல், வேறு பெயரைப் பயன்படுத்தினான். 'வெற்றி அவசியம்தான்; அதற்காக குறுக்கு வழிகளைப் பின்பற்ற முனைந்தால், அவமானம்தான் மிஞ்சும்' என்பது அந்தக் கதையின் அடிநாதமாக இருந்தது. கதையைச் சொல்லி முடித்ததும், அரங்கில் பெரும் கரவொலி எழுந்தது.

பிரவீனின் கதையே முதல் பரிசுக்குரியதாக அறிவித்தார்கள். மேடையேறிய பிரவீன், "இந்தப் பரிசுக்குக் காரணமானவன் என் நண்பன் திநேஷ். அவனுக்கே இந்தப் பரிசைத் தரவேண்டும்" என்றான். திநேஷுக்கு கண்ணீர் பொங்கியது. அழுதவாறே மேடையேறிய அவனை அணைத்துக் கொண்ட பிரவீன், "அழாதே திநேஷ். உன்னை அவமானப்படுத்த இந்தக் கதையைச் சொல்லலை. ஒரு புத்திசாலி தவறானவனாக மாறிடக் கூடாது. அதுக்காகத்தான் சொன்னேன். தயவுசெய்து எதுவும் சொல்லாம பரிசை வாங்கிக்கோ. அப்புறம் பேசலாம்" என்றான்.

பிரவீனை அணைத்தபடி, பரிசை வாங்கிக் கொண்டு கீழிறங்கினான் திநேஷ். அவன் மனம் இப்போது குளிர்ந்திருந்தது. ●



அ. அருண் பாலாஜி,
எட்டாம் வகுப்பு,
சிறுமலர் மேல்நிலைப் பள்ளி,
கும்பகோணம்




கோகுலம்
ஏப்ரல் 2010


தங்க வேட்டைக்காரன்!



போட முடியாத சட்டை!

I. 1. பூத்தபோது மஞ்சள்; காய்ந்தபோது சிவப்பு; பழுத்தபோது கறுப்பு - அது என்ன?

2. பார்க்க முடியும் நூல், தைக்க உதவாத நூல் - அது என்ன நூல்?

- ஏ.கலைஹத் ஃபைஹா,
உ. எண் 998, கீழக்கரை

II. 1. அடி காட்டில், நடு மாட்டில், நுனி வீட்டில் - அது என்ன?

2. மனிதன் போடாத பந்தலிலே மலர்ந்து கிடக்குது பூ - அது என்ன?

3. இரவல் கிடைக்காது; இரவில் கிடைக்கும் - அது என்ன?

- ஜெ.பவித்ரா, ஐந்தாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி,
செஞ்சி

III. 1. பச்சை வீட்டுக்குச் சிவப்பு வாசல் - அது என்ன?

2. முல்லைத் தோட்டத்தில் கறுப்பு முத்து - அது என்ன?

3. அவன் கழற்றிய சட்டையை அடுத்தவர் போட முடியாது - அவன் யார்?

- மு.தௌசிப் அஹமத்,
ஏழாம் வகுப்பு, செஞ்சி

IV. 1.உடம்பு இல்லாதவன் ஊரெல்லாம் திரிவான் - அவன் யார்?

2. அப்பா பணத்தை எண்ண முடியாது; அம்மா புடைவையை மடிக்க முடியாது?

- கு. பிரபாவதி, எட்டாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி

V. 1. குளிர் காலத்தில் நமக்குத் தேவை.

ஆனால் கோடையில் நிறைய கிடைக்கும்-
அது என்ன?

2. தரையெல்லாம் கோடு! அதை அழிக்க முடியலே - அது என்ன?

3. ஒரு வீட்டுக்கு இரண்டு வாசல் - அது என்ன?

4. கை இருக்கு. கழுத்து இருக்கு. வயிறு இருக்கு. உயிர் மட்டும் இல்லை - அது என்ன?

- ஜி.ரம்யா, ஏழாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி

VI. 1. சின்னச் சின்ன கதவுகள் நாங்கள்; சிக்கல் செய்யாக் கதவுகள் நாங்கள்; திறந்தாலும் சத்தம் செய்ய மாட்டோம். மூடினாலும் சத்தம் செய்ய மாட்டோம் - நாங்கள் யார்?

2. இணைபிரியமாட்டார்கள், நண்பர்கள் அல்ல. ஒன்று சேர மாட்டார்கள் பகைவர்கள் அல்ல - அவர்கள் யார்?

3. கட்டாத சுவருக்குள்ளே - வற்றாத ஊற்றுக்குள்ளே எலும்பு இல்லாத மனிதன் எகிறி எகிறிக் குதிப்பான் - அவன் யார்?

4. தூரத்தில் நின்று பார்க்க கறுப்பாய் இருந்தது. பக்கத்தில் போய்ப் பார்க்கப் பளபளப்பாய் இருந்தது. கையில் எடுத்துப் பார்க்க சிவப்பாய் இருந்தது. சுவைத்துப் பார்க்க இனிப்பாய் இருந்தது - அது என்ன?

5. கொட்டத்துப் பானையைக் கோமகனாலும் தூக்க முடியாது. ஆயிரம் பேர் முயன்றாலும் இன்னோர் இடத்தில் வைக்க முடியாது - அது என்ன?



6. காடும் கருங்காடு, மேயும் கரும் மாடு! குத்துவார் உண்டு, உதைப்பார் இல்லை - அது என்ன?

7. பல் இல்லாத வெள்ளையன் காட்டிலே மேட்டிலே வாய்விட்டுச் சிரிக்கிறான் - அவன் யார்?

8. நான் குறைய குறைய அதிகமாகப் பார்க்கலாம். நான் அதிகமாக அதிகமாக குறைவாகப் பார்க்கலாம் - நான் யார்?

9. காலையிலும் நான் நெட்டை, மாலையிலும் நான் நெட்டை பகலில் மட்டும் குட்டை - நான் யார்?

10. சிரித்தால் பல்லைப் பிடுங்குவார்கள் - அது என்ன?

- ஆர்.அஜிதா, கம்பம்



விடைகள் :

I. 1.பேரீச்சம்பழம், 2.சிலந்தி வலை **II.** 1.நெல், 2.இரவு வானில் நட்சத்திரம், 3.தூக்கம் **III.** 1.கிளி, 2.கண், 3.பாம்பு **IV.**1. புகை, 2.நட்சத்திரம், வானம் **V.** 1.வெயில், 2.கைரேகை, 3.மூக்கு, 4. சட்டை **VI.** 1.இமைகள், 2.ரயில் தண்டவாளங்கள், 3. நாக்கு, 4.தேன்கூடு, 5.கிணறு, 6. பேன், 7.பருத்தி, 8.இருட்டு, 9. நிழல், 10. மல்லிகை



வண்ணம் தீட்டுங்கள்!

இங்குள்ள
படத்துக்கு
வண்ணம் தீட்டி
மகிழுங்கள்



புள்ளிகளை இணையுங்கள்





கொடுக்கப்பட்டுள்ள எண்களை இணைத்து
ஒளிந்திருப்பது என்ன என்று கண்டுபிடியுங்கள்

வண்ணச் சிதறல்களாய் திசைகளை அழகுபடுத்துபவை வண்ணத்துப் பூச்சிகள். பூக்கள்தோறும் அலைந்து தேனை உறிஞ்சு கிறபோதே, மகரந்தச் சேர்க்கை நிகழவைக் கின்ற பெரும்பணியை நிகழ்த்துகின்றன இந்த வண்ணத்துப் பூச்சிகள். வண்ணத் துப்பூச்சிகளுக்குக் கண்கள் உண்டு என் பது தெரியும். காதுகள் உண்டா இல் லையா?

காதுகள் கிடையாது என்றோ, அதன் உறிஞ்சுகுழல் மூலம் உணர்ந்து கொள்ளு என்றோ நினைத்துக்கொண்டிருந்தா அது தவறு.

இங்கிலாந்தில் உள்ள பிரிஸ்டோ பல்கலைக்கழகக் குழு ஒன்று இது தொட பான ஆய்வில் ஈடுபட்டது. அவர்கள் ப்ளூ மார்போ (Blue morpho) இ வண்ணத்துப் பூச்சிகளுக்குக் காதுகள் இருக்கும் ரகசியத்தைக் கண்டுபிடித்துள்ள னர். அதன் வண்ணமயமான இறகுகள் உடலோடு இணையும் பகுதியில் இந்தக் காதுகள் அமைந்துள்



ஆர். ரமேஷ்குமார்,
ஒன்பதாம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி,
காளப்பட்டி

ளன. இவை சிறிய புள்ளி போன்றும் சற்று மேலெழும்பிய குமிழ் போன்றும் காணப்படுகின்றன. சாயம்போன மஞ்சள் நிறத்தில் இவை அமைந்துள்ளன.

இந்தப் பகுதியே வண்ணத்துப் பூச்சிகள் ஒலியை கேட்கத் துணை புரிகிறது. '1000 முதல் 5000 ஹெர்ட்ஸ் வரையிலான ஒலியைக் கேட்கும் திறனை வண்ணத்துப் பூச்சிகள் பெற்றிருக்கின்றன' என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.





சின்னச் சின்ன காது!




அதிர்வுகளை காதின் மேற்புறமுள்ள செல்களே அறிந்துகொள்கின்றன. அந்த ஒலி அலைகளை, உட்புற செல்கள் நரம்புகள் கடத்தும் அதிர்வுகளாக மாற்றுகின்றன. அந்த நரம்பு செல்கள் மூலம் வண்ணத்துப் பூச்சிகள் ஒலியை அறிந்து கொள்கின்றன.

பறவைகளின் ஒலியைக் கேட்கவும், தன்னை நெருங்கி வரும் ஆபத்துகளை அறியவும், திசை மாற்றிப் பறக்க வேண்டிய நேரத்திலும் இந்த உறுப்பை அதிகமாக பயன்படுத்துகின்றன.

இதைப்பற்றி ஆய்வாளர் ஒருவர் கூறும்போது, "1912 வரை வண்ணத்துப் பூச்சிகளுக்குக் காது கேட்காது என்றே நம்பப்பட்டது. தற்போது நாங்கள் ப்ளூ மார்போ (Blue morpho) இன வண்ணத்துப் பூச்சிகளின் ஒலி உணர் உறுப்பைக் கண்டுபிடித்து விளக்கி உள்ளோம்" என்றார்.

அடுத்து உங்கள் பார்வையில் வண்ணத்துப் பூச்சி பட்டால், உடனே அதைப் பிடித்து காதைத் தேடாதீர்கள். வண்ணக் கலவையாய் பறக்கும் அழகையும், மலர்களின்மீது கவடு படாமல் அமர்ந்து எழும் அழகையும் அமைதியாக ரசியுங்கள்!




உங்கள் கைவண்ணம்!



மு.விக்னேஷ், எட்டாம் வகுப்பு,
ஆயிர வைசிய மேல்நிலைப் பள்ளி,
பரமக்குடி



சு.பாலாஜி, ஒன்பதாம் வகுப்பு,
கிங் யுனிவர்ஸ் மெட்ரிக். பள்ளி, நெல்லை



எஸ்.ஹரிஷ், ஆறாம் வகுப்பு,
மாண்ட் ஃபோர்ட் பள்ளி,



கே.நதியா, ஆறாம் வகுப்பு,
கஸ்தூரிபா காந்தி பாலிகா
வித்யாலயா, ஏற்காடு





த.பிரகல்யா, பத்தாம் வகுப்பு, உ. எண் 318, பொன்னையா இராமஜெயம் பொதுப் பள்ளி, தஞ்சாவூர்


Z.அஃப்ரின்
ஏழாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக். பள்ளி,
செஞ்சி






அ.க.பார்த்தசாரதி,
எட்டாம் வகுப்பு,
ஆயிர வைசிய மேல்நிலைப்
பள்ளி, பரமக்குடி

எஸ்.கணேஷ்,
ஒன்பதாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப்
பள்ளி, நம்பியூர்





தங்க மழை!



'சே... ஒரு குருவிகூடக் கிடைக்கவில்லை' எரிச்சலாய் முணுமுணுத்துக் கொண்டே நடந்த குள்ளச் சாமியின் பார்வையில் பட்டது அந்தச் பருந்து. வீட்டில் பசியோடிருக்கும் மனைவி, குழந்தைகளின் நினைவு வந்தது. வில்லை எடுத்து வளைத்தான். அம்பைத் தொடுத்துக் குறி பார்த்த நேரத்தில் பேசியது அந்தப் பருந்து :

"நான் நோயுற்று இருக்கிறேன். என்னை எதுவும் செய்யாதே. உன் வீட்டுக்கு அழைத்துச் சென்று, என்னைக் காப்பாற்று. உனக்கு நான் உதவுவேன்."

குள்ளச்சாமி ஆச்சர்யப்பட்டான். 'பருந்து பேசுமா? இதென்ன விசித்திரம்' என்று தோன்றியது அவனுக்கு. தவிர தனக்கு உதவும்படிக் கேட்டதால் ஓரளவு இரக்கம்கூட மேலிட்டது அவனுக்கு.

அந்தப் பருந்தை தூக்கிக் கொண்டு வீட்டுக்குப் போனான். அந்தப் பருந்துக்கு மருந்து கொடுத்தான். உணவு கொடுத்துப் பராமரித்தான். அது குணமாகும் வரை அவன் வேட்டைக்கும் செல்லவில்லை. காட்டில் கிடைத்த பழங்களையும், காய்களையும் கொண்டே வீட்டுக்கும் உணவளித்தான். அவன் மனைவியே அவன் செயலைக் கண்டு வியந்து போனாள்.

சில நாட்கள் கடந்தன.

குணமடைந்த பருந்து சரேலென்று மேலெழுந்து பறந்தது. வானில் மேலும் கீழுமாய் வளைந்து சுற்றிக் கீழிறங்கியது. அதை கவனித்துக் கொண்டிருந்த குள்ளச் சாமி கேட்டான் : "நன்றாகக் குணமடைந்து விட்டாய்? வேறு உதவி எதுவும் வேண்டுமா?" அதைக் கேட்ட பருந்து, "இயலாதபோது உதவி கேட்பதில் தவறில்லை; முடியும்போது உதவச் சொல்வது நியாயமில்லை. இப்போது நான்தான் உனக்கு உதவ வேண்டும்" என்றது.

குள்ளச்சாமி பதில் பேசாமல் நின்றான். "நான் என்ன உதவி செய்ய முடியும் என்று உனக்குச் சந்தேகமாய் இருக்கிறது இல்லையா? இப்போது பார்" என்ற பருந்து, வேகவேகமாய் தன் பெரும் சிறகுகளை அசைத்தது. அந்த வேகத்தில்

சிறகுகளுக்குள்ளேயிருந்து தங்க நாண யங்கள் சிதறின. குப்புசாமி வியப்புடன் பார்த்தான்.

"இந்த நாணயங்கள் அனைத்துமே உனக்குத்தான். எடுத்துக் கொள். என்னைக் காப்பாற்றியதற்காக நான் செலுத்தும் நன்றி இது!"


பருந்து சொன்னதைக் கேட்ட குப்பு சாமிக்குச் சுருக்கென்றது. 'இதுவரை எத் தனை பறவைகளையும், விலங்குகளையும் கொன்றிருக்கிறோம்' என்று எண்ணிக் கசிந்தது அவன் மனம். கண் கலங்கிய நிலையில் அவன் சொன்னான். "இனி எந்த உயிரையும் நான் வேட்டையாட மாட்டேன். இது நிச்சயம்."

அதைக் கேட்ட பருந்து மீண்டும் சிறகடித்தது. இப்போது அதைவிட அதிகமான அளவில் தங்க நாணயங்கள் சிதறின. "குப்புசாமி! நீ உழைத்துப் பிழைக்கும் திறனுள்ள மனிதன். அதுதான் உன் பெருமை! கொலைத் தொழிலை விட்டேன் என்ற உன் மன மாற்றத்துக்குத்தான் இந்தப் பரிசு!" என்று சொன்ன பருந்து, சரே லென்று வானில் பறந்து மறைந்தது. குப்புசாமி தங்க நாணயங் களை அள்ளிக் கொண்டு வீட்டினுள் நுழைந்தான். முதல் வேலையாக, சுவரி லிருந்த வில்லை முறித்து வெளியே எறிந்தான். ●



சி.கதிர்,
பத்தாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப் பள்ளி,
நம்பியூர்

நியூட்டனின் மூன்றாம்



ஆசிரியர் : நியூட்டனின் மூன்றாம் விதி சொல்லு.

மாணவன் : எப்போது என் பாடப் புத்தகத்தை திறந்தாலும் உடனே தானாகவே என் கண்கள் மூடிக்கொள்ளும்.

- **ஜி.லக்ஷ்மி,**
உ. எண் 1429,
காஞ்சிபுரம்



ஆசிரியர் : கங்கா ஏன் குழிக்குள்ள உட்கார்ந்து படிக்கிறா?

யமுனா : எதையும் ஆழமா படிக்கணும்னு நீங்க சொன்னீங்களாமே டீச்சர்.

- **ஆர். ரம்யா,** பத்தாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப் பள்ளி,
நம்பியூர்



"டேய், எங்கடா போற!"

"மாவு அரைக்க போறேன் ஐயா."

"அதுக்கு ஏண்டா ஒளிஞ்சு ஒளிஞ்சு போற."

"அம்மாதான் 'நைசா' மாவு அரைச்சுகிட்டு வரச் சொன்னாங்க."

விதி!



நோயாளி : டாக்டர் நீங்க கொடுத்த மருந்து மாத்திரை எல்லாம் சாப்பிட்டேன். உருண்டையா இருந்த பெரிய கண்ணாடி மாத்திரைதான் முழுங்க ரொம்ப சிரமமா இருந்தது.

டாக்டர் : அடப்பாவி பேப்பர் வெயிட்டை எடுத்துட்டு போனது நீதானா?





டாக்டர் : இந்தாங்க டானிக். தினமும் ஒரு ஸ்பூன் சாப்பிடுங்க.

நோயாளி : ஸ்பூன் ரொம்ப நீளமா இருக்குமே. டாக்டர் எப்படி முழுங்குறது?

- த.பிரகல்யா, உ. எண் 318, பத்தாம் வகுப்பு, தஞ்சாவூர்

டாக்டர் : இந்த மாத்திரையெல்லாம் வெறும் வயித்துலதான் சாப்பிடணும்.

நோயாளி : பனியன்கூட போடக் கூடாதா டாக்டர்.


- ஜி.பிரபாகரன், பன்னிரண்டாம் வகுப்பு, உ. எண் 961, காஞ்சிபுரம்

"எப்படியோ கஷ்டப்பட்டு வீடுகட்டி முடிச்சிட்டேன். இருந்தாலும் மனசுக்குள்ள பயமா இருக்கு?"

"ஏன்?"

"வீட்டுமனை யாருதுன்னே தெரிய லையே."

- ஜி.லக்ஷ்மி, உ. எண் 1429, காஞ்சிபுரம்



நம் நாட்டில், திருமணம் போன்ற நிகழ்வுகள், பூஜை, அர்ச்சனை போன்ற வழிபாடுகள் என்று அனைத்திலும் முதலிடம் வகிப்பது வெற்றிலை. தாம்பூலம், நாகவல்லி, வேந்தன், திரையல் என்பன இதன் வேறு பெயர்கள். கம்மாறு வெற்றிலை, கற்பூர வெற்றிலை என்று இதில் பலவகைகள் உண்டு. இதன் தாவரவியல் பெயர் Piper Betel.

வயிறு உப்புசம்,



சளி, இருமல், மலச்சிக்கல், நுரையீரல் தொடர்பான நோய்கள் போன்றவற்றுக்கு வெற்றிலை மருந்தாகப் பயன்படுகிறது. 'வெற்றிலையின் வேரை வாயிலிட்டு மென்றால், குரல் வளம் பெருகும்' என்கிறார்கள்.

இந்த வெற்றிலை தமிழ்நாட்டில் கும்பகோணம் பகுதியிலும், தேனி மாவட்டத்தில் பெரிய குளம், சின்னமனூர் பகுதியிலும் அதிகமாக பயிர் செய்யப்படுகிறது. இருப்பினும் வெற்றிலை என்றால் கும்பகோணம் தான் என்கிற அளவுக்குக் கும்பகோணம் வெற்றிலை பிரசித்தம்.

வெற்றிலையைப் பயிர் செய்ய விதை என்று எதுவும் இல்லை. காம்புகளை வெட்டிப் பதியம் போட்டுத்தான் பயிர் செய்கிறார்கள். வெற்றிலை பயிர் செய்யும் நிலப்பகுதியை கொடிக்கால் என்று



மலேசிய

அழைக்கின்றனர்.

வெற்றிலையில், கருகருவென்று கரும் பச்சை நிறத்திலிருப்பது ஆண் வெற்றிலை என்றும், இளம் பச்சை நிறத்தில் இருப்பது பெண் வெற்றிலை என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கிறார்கள்.

இந்த வெற்றிலைக்குப் பல மருத்துவ



குணங்கள் உண்டு.

விஷ முறிவுக்கு வெற்றிலையில் மிளகை வைத்து மடித்து வாயிலிட்டு மென்று விழுங்குவது பயன் தரும் என்று கருதப்படுகிறது.

வெற்றிலைச் சாற்றில் சிறிதளவு கற்பூரத்தைக் குழைத்து நெற்றியில் தட



ஏ.ராம்குமார்,
பன்னிரண்டாம் வகுப்பு,
சி.எஸ்.எம்.மேல்நிலைப் பள்ளி,
காஞ்சிபுரம்

செல்லம்!



வினால், தலைவலி குணமாகும். இப்படி வெற்றிலையின் சிறப்பைப் பற்றி பலபடப் பேசுகிறது சித்த மருத்துவம்.


இன்றும்கூட சிலர் வெற்றிலையை இடது கையால் வாங்க மாட்டார்கள். வெற்றிலையை வெறுந்தரையில் வைக்கக் கூடாது என்பார்கள். வெற்றிலையை இரண்டு கைகளாலும் வாங்க வேண்டும் என்பது மரபு.

நெதர்லாந்து நாட்டில் சிறையில் அடைபட்டுக் கிடக்கும் கைதிகளுக்கு மலேரியா போன்ற நச்சுக் காய்ச்சல் வராமல் இருக்க வெற்றிலையைக் கொடுப்பது வழக்கம்.


சண்டை போட்டுக்கொள்பவர்கள் சமாதானம் அடைய வெற்றிலை மாற்றிக் கொள்வது மலேசியாவில் வழக்கம். இவை மட்டுமல்ல; வெற்றிலையால் மாலை கட்டி அனுமனுக்குச் சூட்டி வழிபடுகிறார்கள்.

இவை அனைத்தையும்விட, ஆச்சர்யமான விஷயம், இந்தச் செடி மலேசியாவில் தோன்றியது என்று சொல்லப்படுகிறது. என்றாலும், 'செல்லம்' என்று வெற்றிலையைக் கொண்டாடுவதென்னவோ தஞ்சாவூர்க்காரர்கள்தான்!

வித்தியாசங்களைக் கண்டுபிடி!



இரண்டு படங்களுக்கும் இடையே ஐந்து வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.



கோகுலம் சிறுவர் சங்கம் பட்டியல்

இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!

1526 சௌம்யா கண்ணன், இரண்டாம் வகுப்பு, புனித செசிலியாஸ் பொதுப்பள்ளி, புது டில்லி

1527. என்.வெங்கடேஷ், ஐந்தாம் வகுப்பு, கலைமகள் மெட்ரிக் மே. நி. பள்ளி, செம்பொனார்கோவில்

1528. என்.ஷைலஜா, ஆறாம் வகுப்பு, சௌரிராஜன் உயர்நிலைப் பள்ளி, செம்பொனார்கோவில்

1529. என்.ஐயப்பன், ஒன்பதாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்

1530. த.லிங்கேஸ்வரன், ஒன்பதாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்

1531. அ.க.பார்த்தசாரதி, எட்டாம் வகுப்பு, ஆயிர வைசிய மே. நி. பள்ளி, பரமக்குடி

1532. ந.ரஞ்சிதா, ஒன்பதாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, அகஸ்தீஸ்வரம்

1533. க.ஹரிணி, ஐந்தாம் வகுப்பு, ஸ்ரீகுமரகுருபரர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, திருப்பனந்தாள்

1534. எம்.சந்தியா, எட்டாம் வகுப்பு, வள்ளல் சபாபதி மெட்ரிக் மே.நி. பள்ளி, சென்னை

1535. கே.கிஷோர், பத்தாம் வகுப்பு, எம்.சி.சி. பள்ளி, சென்னை

1536. அ.பிஸ்மி, இரண்டாம் வகுப்பு, வள்ளல் சபாபதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை

1537. எம்.அட்சயா, ஐந்தாம் வகுப்பு, வள்ளல் சபாபதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை

1538. ப.தட்சிணாமூர்த்தி, ஒன்பதாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்

1539. பி.இலட்சுமணன், பன்னிரண்டாம் வகுப்பு, சி.எஸ்.எம். நகராட்சி மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்

1540. எஸ்.கார்த்திகேயா, ஒன்பதாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்

1541. ஆ.யாதவன், ஒன்பதாம் வகுப்பு, காமராஜ் மே. நி. பள்ளி, நம்பியூர்

1542. எஸ்.முரளிகிருஷ்ணன், ஏழாம் வகுப்பு, புன்னமை தியாகராய வன்னியர் சங்கம், காஞ்சிபுரம்



1543. த.இரமேஷ்பிரபு, ஏழாம் வகுப்பு, விவேகா மெட்ரிக் மே. நி. பள்ளி, சிவகிரி.
1544. சீ.அப்பாஸ் அலி, பத்தாம் வகுப்பு, அரபி ஒலியுல்லா உ. நி. பள்ளி, புதுவலசை
1545. எஸ்.கணேஷ், ஒன்பதாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்
1546. ப.விக்னேஷ், ஒன்பதாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்
1547. மா.பிரின்சி ஜெசிகா, எட்டாம் வகுப்பு, தூய மரியன்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி, தேவகோட்டை
1548. ஹ.பா.முஸ்டாக் சமீர், ஒன்றாம் வகுப்பு, மூனா ஆஸ்திரேலியன் மெட்ரிக் பள்ளி, கடலூர்
1549. வே.உமாமகேஸ்வரி, ஒன்றாம் வகுப்பு, எஸ்.எல்.என்.எம்.வி. மேல்நிலைப் பள்ளி, கரடிவாவி
1550. வெ.கௌரிசங்கர், ஒன்றாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்
1551. சு.அருண்குமார், எட்டாம் வகுப்பு, அன்னை தெரசா ஆர்.சி. உயர்நிலைப் பள்ளி, வல்லம்
1552. ஆர்.பார்த்தசாரதி, ஆறாம் வகுப்பு, டான்போஸ்கோ மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, திருப்பத்தூர்
1553. எஸ்.குணசேகர், ஒன்பதாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, காளப்பட்டி
1554. சி.பிரதீத், ஐந்தாம் வகுப்பு, நேஷனல் பப்ளிக் ஸ்கூல், ஷிமோகா
1555. ஆர். நந்தகுமார், ஆறாம் வகுப்பு, ஆருத்ரா வித்யாலயா பள்ளி, பெரம்பலூர்
1556. ஆர்.மகாலக்ஷ்மி, நான்காம் வகுப்பு, ஆருத்ரா வித்யாலயா பள்ளி, பெரம்பலூர்
1557. ஆர்.கே.உத்தம் ஸ்ரீராம், ஆறாம் வகுப்பு, ஸ்ரீ லதாங்கி வித்யா மந்திர், பொள்ளாச்சி
1558. எஸ்.வெனிஸ், ஒன்பதாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்
1559. கு.சித்ரா, ஒன்பதாம் வகுப்பு, அரசினர் மகளிர் மே. நி. பள்ளி, திருக்கழுக்குன்றம்
1560. ஒய்.சந்தோஷ்பிரபு, எட்டாம் வகுப்பு, ஆர்.சி. தூய சவேரியார் நடுநிலைப் பள்ளி, கல்லக்குடி
1561. எம்.மணிரத்னம், பத்தாம் வகுப்பு, இந்து மே. நி. பள்ளி, சென்னை



1562. கா.பூ. கவின் கிருஷ்ணா, இரண்டாம் வகுப்பு, ஸ்ரீவிஜய் வித்யாலயா மெட்ரிக் மே. நி. பள்ளி, ஓசூர்
1563. ச.மயில்சாமி, ஒன்பதாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்
1564. ஐ.ஐஸ்வர்யா, ஒன்பதாம் வகுப்பு, லியோ மெட்ரிக் மே. நி. பள்ளி, சென்னை
1565. எஸ்.ரேஷ்மா, ஏழாம் வகுப்பு, அரசினர் உ. நி. பள்ளி, திருப்புலிவனம்
1566. அ.ஆத்மநாதன், எட்டாம் வகுப்பு, அரசினர் உயர்நிலைப் பள்ளி, சித்துக்காடு
1567. எம்.மிருணாளினி, ஏழாம் வகுப்பு, அக்னு. எஸ்.சுந்தர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மதுரை

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

1568. செ.லோகநாயகி, ஆறாம் வகுப்பு, பு.தி.வ.ச. உயர்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்
1569. சி.சிவபிரியங்கா, ஒன்பதாம் வகுப்பு, புனித மரியன்னை மேல்நிலைப் பள்ளி, கடலூர்
1570. ஆர்.சதீஷ்குமார், பன்னிரண்டாம் வகுப்பு, காமராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்
1571. கே.ஏ.விஷ்ருத், மூன்றாம் வகுப்பு, கிஷோர் பள்ளி, கர்நாடகா
1572. ச.ஜீவா கார்த்திகேயன், ஒன்பதாம் வகுப்பு, புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளி, பெரியகுளம்
1573. இரா. விஜய், ஏழாம் வகுப்பு, விவேகா மெட்ரிக் பள்ளி, சிவகிரி
1574. செ.பரணீதரன், மூன்றாம் வகுப்பு, சரஸ்வதி வித்யாஸ்ரம் பள்ளி, கவுந்தப்பாடி
1575. ஆர்.அருண், எட்டாம் வகுப்பு, கிரைஸ்ட் தி கிங் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கும்பகோணம்

விருந்துக்

"நகை வியாபாரியின் வீட்டில் இன்று விருந்து. நம்மையும் அழைத்திருக்கிறார்கள்."


குரு சொன்னதைக் கேட்டவுடன் சீடனுக்கு உற்சாகம் தாங்கவில்லை. 'ஆ... விதவிதமான உணவு வகைகள் இருக்கும். நன்றாகச் சாப்பிடலாம்' என்று ஓடின அவன் எண்ணங்கள். உப்பு, காரம், புளிப்பு என்று சுவைகளை ஒதுக்கிய உணவு வகைகளையே ஆசிரமத்தில் சாப்பிட்டு அலுத்துப் போயிருந்தான் அவன். அதனால், வேகமாகத் தயாரானான்.

ஆனால், குரு அமைதியாக உட்கார்ந்திருந்தார். அதைக் கவனித்த சீடன், "நாம் புறப்பட வேண்டாமா?" என்றான்.

"நாம் போகத்தான் வேண்டும். இல்லாவிட்டால் அவர் வருத்தப்படுவார். அதற்கு முன்னால், நீ அங்கு போய் எத்தனை மனிதர்கள் வந்திருக்கிறார்கள் என்று பார்த்துவிட்டுவா," என்றார் குரு.

'இதென்ன கேள்வி? விருந்து என்றால் ஏராளமான பேர் வரத்தானே செய்வார்கள். அத்தனை பேரையும் எண்ணிச் சொல்ல வேண்டுமா? குரு ஏன் இப்படிச் சொன்னார்?' என்று யோசித்தபடியே நடந்தான் சீடன். அந்தச் சிந்தனையில், வழியில் கிடந்த மரக் கட்டையில் தடுக்கிக்கொண்டான்.

அந்தக் கட்டையின் உடைந்த பகுதி, அவன் காலில் கீறியதால் இலேசாக ரத்தம் கசிந்தது. விருந்துக்காக அடுப்பெரிக்கக் கொண்டுபோன விறகுக் கட்டையில் ஒன்றாக இருக்கலாம் என்று நினைத்தான். அதேசமயம், அவனுக்குள் ஓர் எண்ணம் பளிச்சிட்டது. தன் காலில் இடறிய அந்த மரக்கட்டையை எடுத்துக்கொண்டு விருந்து நடக்கும் வீட்டுக்கு வந்தான். சாப்பிட்டு



ஜி.சரவணன், காஞ்சிபுரம்

வந்தவர்கள்!

விட்டு வரும் வழியில் அந்தக் கட்டையைப் போட்டுவிட்டு ஒதுங்கி நின்றான்.

உணவருந்திய விருந்தினர்கள், ஒவ்வொருவராக கை கழுவுவதற்காக வெளியே வந்தார்கள். அந்தக் கட்டையில் இடறிக் கொண்டார்கள். "யார்டா அவன் இந்தக் கட்டையை வழில கொண்டு வந்து போட்டது. சுத்த முட்டாளா இருப்பான் போல..." என்று திட்டினார்கள். அதைக் கடந்து சென்று கைகழுவினார்கள். அகன்று போனார்கள். சீடன் அதைக் கவனித்துக் கொண்டே இருந்தான்.



அப்போது வயது முதிர்ந்த ஒருவர் வெளியே வந்தார். கட்டையைக் கவனிக்காத அவரும் அதில் இடறிக் கொண்டார். உடனே, குனிந்து அந்தக் கட்டையைத் தூக்கி ஓரத்தில் போட்டார். அந்த இடத்தில் ஒடிந்து கிடந்த குச்சிகளையும் அப்புறப்படுத்தினார். சலிப்போ, முணுமுணுப்போ இல்லை அவரிடம்! 'தன்னுடைய வேலை இது' என்று அறிந்தது போலச் செயல்பட்டார். பிறகு கைகழுவிக் கொண்டு நடந்தார்.

இதைப் பார்த்த சீடன் குருவிடம் விரைந்து போய்ச் சொன்னான் :

"குருவே, விருந்துக்கு ஒரே ஒரு மனிதர்தான் வந்திருந்தார்."

நடந்த சம்பவத்தை விவரித்தான்.

அதைக் கேட்ட குரு, "மற்றவர்கள் துன்புறக் கூடாது என்ற எண்ணத்துடன், தன்னுடைய பணியைச் செய்பவனே மனிதன். அதைச் செய்வதற்கு எந்தப் பிரதிபலனும் எதிர்பார்க்கவும் கூடாது. இதை நீ புரிந்து கொண்டாய் என்பதை உன்னுடைய செயல் புரிய வைக்கிறது. சபாஷ்! வா விருந்துக்குப் போகலாம்" என்றார் புன்னகையுடன்! சீடனும் சந்தோஷமாகப் பின் தொடர்ந்தான். ●

✱ ஓட்டுடன் வாழும் உயிரினம் என்றால், ஆமைதான் நினைவுக்கு வரும். ஆனால், உடல் முழுவதும் கவசம் போன்ற பாதுகாப்புடையது 'ஆர்மடில்லோ' (Armadillo).

✱ 'ஆர்மடில்லோ' என்பது ஸ்பானிய மொழிச் சொல். இதற்கு 'கவசப் பாதுகாப்புடைய' உயிரினம் என்று பொருள்.

✱ இவை சிறிய கால்களைக் கொண்டவை. என்றாலும், விரைவாக நகரக் கூடியவை.

✱ தண்ணீருக்குள் ஆறு நிமிடங்கள் வரை மூச்சடக்கும் திறன் இவற்றுக்கு உண்டு.

✱ பூச்சிகள் மற்றும் புழுக்கள்தான் ஆர்மடில்லோக்களுக்குப் பிடித்தமான உணவு. என்றாலும் ஆர்மடில்லோக்களின் பல வகைகள், பொதுவாக 'எறும்புத் தின்னி'யாகத்தான் அறியப்படுகின்றன. சமயங்களில் தாவரங்கள் மற்றும் பழங்களையும் உண்ணும்.

✱ நைன் பேண்டட் (nine banded), ஜெயன்ட் (giant), ட்வார்ஃப் (dwarf), பிங்க் ஃபேரி (pink fairy), ஹேரி (hairy)... என்று இவற்றில் இருபது வகை இனங்கள் இருக்கின்றன.

✱ மிகப் பெரிய ஆர்மடில்லோ சுமார் ஒன்றரை மீட்டர் நீளமுடையதாக இருக்கும். மிகச் சிறிய ஆர்மடில்லோ பன்னிரண்டு செமீ. அளவே இருக்கும்.

✱ இவை மழைக்காட்டுப் பிரதேசங்களிலும், புல்வெளிகளிலும் காணப்படுகின்றன. மிதமான தட்பவெப்ப நிலையே இவை வாழ்வதற்கு ஏற்றவை.



✱ ஒரு நாளில் சுமார் பதினாறு மணி நேரத்தை இவை தூக்கத்திலேயே கழிக்கின்றன. காலை மற்றும் மாலைப் பொழுதில் இரை தேடுகின்றன.

✱ தலை முதல் வால் வரை அமைந்துள்ள ஓடுகள், கண்ணுக்கும் கவசம் போல நீண்டிருப்பதால், இவற்றின் பார்வைத் திறன் கொஞ்சம் குறைவுதான். ஆனாலும்,

ம.விவேக், குட்டம்

பயோடேட்டா



கவசம் அணிந்தவன்!



நுகரும் திறன் மூலம் தங்கள் இரையை கண்டு கொள்கின்றன.


✸ இவை, நிலத்தைத் தோண்டி தங்கள் வீடுகளை குழிகளாகவும், பொந்துகளாகவும், அமைத்துக் கொள்கின்றன.

✸ ஒரு முக்கியமான வேறுபாடு என்னவென்றால், ஆமைக்கு ஒரு ஓடுதான் இருக்கும். ஆனால், ஆர்மடில்லோவுக்கு தனித் தனியான ஓடு அமைப்பு காணப்படும்.

✸ இவற்றில், அமெரிக்கப் பகுதிகளில் காணப் படுபவை 'நைன் பேண்டட் ஆர்மடில்லோ' மட்டும் தான்!

இதைத் தவிர, ஆர்மடில்லோவின் மற்ற வகைகள் அஞ்சத்தக்க வகையில் - வேட்டையாடப் படுவதால், அருகி வருகின்றன. பன்னாட்டு இயற்கை பாதுகாப்புச் சங்கம் அறிவித்துள்ள, அழிந்து வரும் உயிரினங்களுக்கான பட்டியலில் ஆர்மடில்லோவும் இடம் பெற்றுள்ளது. ●

வரைந்து பாருங்கள்!



வழங்குபவர் : எஸ்.வஜ்ரவேலு

வெள்ளி நரி!

கதை : வீரசிகாமணி, ஆதினமிளகி
படம் : பிள்ளை



முத்தான முத்துக்கள்!

நவரத்தினங்களில் ஒன்றாகக் கருதப் படும் முத்து, இயற்கையில் மிக அரிதாகவே கிடைக்கிறது. அதனாலேயே, இது விலை மதிப்பு மிக்கதாக இருக்கிறது. மிகப் பழங்காலத்தில் இருந்தே முத்துக் குளிப்பதில் தமிழகம் புகழ்பெற்று விளங்குகிறது. தமிழின் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத் தில், பாண்டிய மன்னனின் மனைவி அணிந்த சிலம்பினுள் இருந்தவை முத்துப் பரல்கள் என்கிற செய்தி விவரிக்கப் பட்டுள்ளது.

இயற்கையாகவே, குளிர்ச்சியான தன்மை கொண்டவை முத்துக்கள். இவற்றை முத்துச்சிப்பிகளே உருவாக்கு கின்றன. இரு மூடிகளைக் கொண்ட மெல்லுடலிகளுள் 'பின்க்டடா' (pinctada) எனும் சிப்பிகளே இத்தகைய திறன் கொண்டவை.

முத்து உற்பத்தியைப் பொருத்த வகையில் இந்தியாவில் 'பி.ஃபியூகடா' (p.fucata) எனும் இனமே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

பெர்ஷிய வளைகுடா, செங்கடல், கட்ச் வளைகுடா, மன்னார் வளைகுடா, பாக்ஜலசந்தி போன்ற பல பகுதிகளில் இவை காணப்படுகின்றன. இந்திய, இலங்கைக் கடற்கரைப் பகுதிகளில் உள்ள பாறைகளின் (உயிரற்ற பவளப் பாறைகளிலும்) விளிம்புகளில் இவை அதிகமாகக் காணப்படுகின்றன. இவற்றை 'முத்தங்கரைகள்' (முத்துவங்கிகள்) என்று குறிப்பிடுகின்றனர்.

கடலுக்குள் வாழும் ஓடுகள் பெற்றுள்ள உயிரினங்களில் ஒன்று, முத்துச்சிப்பி. இந்த சிப்பிகளிலே நூறுக்கும் மேற்பட்ட வகைகள் இருக்கின்றன. இந்தச் சிப்பிகளின் ஓடு இரு பகுதிகளால் ஆனது. இந்த ஓட்டுக்குள் ஏதாவது ஒரு பொருள்



புகுந்தால் - அது மணல் துகளாகக் கூட இருக்கலாம், அதைச் சுற்றிலும் சிப்பி ஒரு சுவர் அமைக்கும். இப்படி அதன் மேல் அடுக்கடுக்காகப் படிந்து, உருண்டை வடிவம் பெற்று முத்தாகிறது.

இந்த முத்துக்கள், ஒளிரும் தன்மை, வடிவம், நிறம், அளவு... இப்படி பல தன்மைகளைப் பொறுத்து தர நிர்ணயம்



டி.ஜான்பால்,
உ.எண் 1233, ஓசூர்



செய்யப்படுகின்றன. தவிர, அவை உருவான நீர், சிப்பியின் வகை, உருவான பகுதி இவற்றைப் பொறுத்தும் வேறுபடுகின்றன. இரண்டு விதமாக முத்துக்களைத் தரநிர்ணயம் செய்கின்றனர். அவற்றை AAA-A முறை என்றும் A-D முறை என்றும் குறிப்பிடு கின்றனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை இயற்கையாகக் கிடைத்த முத்துக்களே பயன்பாட்டில் இருந்தன. 1896-ஆம் ஆண்டு, ஜப்பானியரான 'கொக்கிச்சி மிக்கிமோட்டோ' என்பவர், செயற்கையாக, முத் துக்களை உருவாக்கும் முயற்சி யில் வெற்றி பெற்றார். 'முசெல்' (mussel) வகையைச் சேர்ந்த சிப்பி களுக்குள் நுண்துகளைச் செலுத்தி, அவற்றை ஒரு கூட்டினுள் இட்டு, நீரினுள் இறக்கினார். சுமார் மூன்று முதல் ஆறு ஆண்டுகளில் அவை முத்துக்களை உருவாக்கின.

எவ்வளவுதான் செயற்கையான முத்துக் களை உருவாக்கினாலும், இயற்கையான முத்துக்கு அவை ஈடாகாது. 'பாண்டி நாடு முத்துடைத்து' என்கிற பழைய மொழியை நினைவூட்டுவது போல, இன்றும் தூத் துக்குடிக்கு முத்து நகர் எக்ஸ்பிரஸ் சென்று கொண்டுதான் இருக்கிறது. ●



அக்கா, அக்கா அவரைக்கா!

அக்கா அக்கா அவரைக்கா(ய்)
அடர்ந்த பச்சை நிறமக்கா!
கொடியில் கொத்தாய் காய்த்தேதான்
கோடி நன்மை தருமக்கா!

அக்கா அக்கா பாகற்கா(ய்)
அதற்குச் சுவையோ கசப்பக்கா!
கசப்பாய் இருந்தும் உடலுக்கு
உகந்த சத்தைத் தருமக்கா!

நீண்டு வளரும் முருங்கைக்காய்
நரம்பில் வலிமை தருமக்கா
பூண்டு, மல்லி இவையுடனே
குழம்பில் ருசியை தருமக்கா!

குண்டு குண்டாய் சுண்டைக்காய்
கூட்டில் குழம்பில் சுவையக்கா!
தண்டு, கீரை இவையுடனே
சமைத்தால் சத்து அதிகங்கா!

படிக்கும் சிறுவர் நமக்குத்தான்
பலவகை காய்கள் இருக்கக்கா
உணவில் நாளும் சேர்த்தாலே
உடலும் வலிமை பெறுமக்கா!

– **கன்னிக்கோயில் இ.ராஜா**

தெரிஞ்சுப்போம்!

கிலி என்றால் அச்சமாம்
கிளி என்றால் பறவையாம்!
ஒலி என்றால் ஓசையாம்
ஒளி என்றால் வெளிச்சமாம்!

கலை என்றால் வித்தைகள்!
களை என்றால் நீக்குதல்!
உளை என்றால் சேறதாம்
உலை என்றால் உலைக்களம்!

அலை என்றால் அலைதலாம்
அளை என்றால் தயிரதாம்!
இலை என்றால் செடியிலே!
இளை என்றால் மெலிதலாம்!

தலை என்றால் முதன்மையாம்
தளை என்றால் கட்டுதல்!
வலை என்றால் மீன்வலை!
வளை என்றால் வளைதலாம்!

- த. சுகன்யா, விருதுநகர்

என் சைக்கிள்

புத்தம் புதிய சைக்கிளாம்!
புயலைப் போலப் பறக்குமாம்!
சத்தம் எதுவும் இன்றியே
சந்து பொந்தில் போகுமாம்!


அடம் பிடித்து அழுததால்
அப்பா வாங்கித் தந்தது!
பெடல் மிதித்து ஓட்டினால்
பெருமையாக இருக்குது!

பின்புறத்தில் கேரியர்
பிரியமான நண்பனை
அன்புத் தம்பி தங்கையை
அதிலே வைத்து ஓட்டுவேன்!

சாகஸங்கள் பண்ணுவேன்!
சர்க்கஸ் வித்தை செய்து, நான்
வேகமாக ஓட்டுவேன்!
வீரனென்று காட்டுவேன்!

- நெ.சண்முகவேலாயுதம், சென்னை

கவிதைப் பூங்கா



தங்க வேட்டைக்காரன்!

ச.ந.கண்ணன்

1980ல் இந்திய ஹாக்கி அணி ஒலிம்பிக்கில் தங்கம் வாங்கி, 28 வருடங்களுக்குப் பிறகு, தங்க மெடல் பெற்றுக்கொடுத்தவர் அபினவ் பிந்திரா. "12 வயதில் பொழுதுபோக்காக ஆரம்பித்த விளையாட்டு இன்று அவருடைய

* அல்வின்



* எமி லேபோ



தங்க வேட்டைக்கு முக்கியக் காரணமாக இருக்கிறது. நான் மட்டுமல்ல; 2012 ஒலிம்பிக்கில் ரொஞ்சன் சோதி என்கிற இன்னொரு இந்திய வீரரும் நிச்சயம் தங்கம் வெல்வார்" என்று கணிக்கிறார் அபினவ்.

தினமும் ஆறு மணி நேரம் பயிற்சி செய்கிறார். பலருக்குக் கடவுள்தான் எல்லாமும் செய்வார். எனக்கு நான் மட்டும் தான். எனக்கு உழைப்பில் மட்டும்தான் நம்பிக்கை உண்டு என்கிறார். 2009ல் பத்மபூஷண் பட்டம் வென்ற அபினவ் இப்போதிருந்து 2012 ஒலிம்பிக்குக்குத் தயாராகி வருகிறார். ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் அடைந்த தோல்விதான் அவரை மேலும் மேலும் உழைக்க வைக்கிறது.

உலகக்கோப்பை ஹாக்கி போட்டியில் இந்திய அணி படுதோல்வி அடைந்து விட்டது. அடுத்ததாக காமன்வெல்த் கேம்ஸ் மற்றும் ஏஷியன் கேம்ஸ் என இரு போட்டிகள் உள்ளன. இந்த இரண்டிலும் ஓரளவு ஜெயித்தால் மட்டுமே மீண்டும் பழைய நிலைமையை அடையமுடியும். சக் தே இந்தியா என்று நிஜத்திலும் நாம் புகழ்பாடவேண்டாமா?

சச்சின் தெண்டுல்கர் ஒருநாள் போட்டியில் 200 ரன்கள் எடுத்துவிட்டார். அடுத்ததாக இந்தச் சாதனையை யார்

* ரவி போபரா



* அபினவ்



செய்யப்போகிறார்? 'வீரேந்திர ஷேவாக்' என்கிறார் இங்கிலாந்து வீரர் ரவி பொபாரா. 'ஷேவாக்கின் வேகமான ஆட்டம் நிச்சயம் அவரை அந்தச் சாதனையை உடைக்கச் செய்யும்' என்கிறார் அவர்.

'கால்பந்தை இங்கிலாந்து கண்டு

பிடித்தது. ஆனால் பிரேஸில்தான் அதை முறைப்படுத்தியது' என்று பிரேஸிலைப் பாராட்டும்விதமாகச் சொல்வார்கள். தென் ஆப்பிரிக்காவில் நடக்கவுள்ள கால்பந்து



விளையாட்டுப் போட்டியை வெல்ல, பிரேஸிலுக்கு அதிக வாய்ப்பு இருப்பதாக கால்பந்து நிபுணர்கள் சொல்கிறார்கள். 2002ல் வெற்றி பெற்ற பிரேஸில் 2006ல் காலிறுதியில் தோற்றுப்போனது. இந்தமுறை பிரேஸிலின் நட்சத்திர வீரர் ரொனால்டோ அணியில் தேர்வு பெறவில்லை. நிறைய புதிய வீரர்களோடு களம் இறங்குகிறது பிரேஸில் அணி.

2012 லண்டன் ஒலிம்பிக்ஸில் பெண்கள் குத்துச்சண்டை அறிமுகமாக உள்ளது. நிச்சயம் எங்களைப் பலர் கேவலமாக எண்ணுகிறார்கள். ஆனால் நம்பமுடியாத தரத்தை காண்பித்து அனைவரையும் இன்ப அதிர்ச்சிக்கு உள்ளாக்கப்போகிறோம் என்கிறார்கள் குத்துச்சண்டை வீராங்கனைகள்.

இந்திய கிரிக்கெட் அணியில் இப்போது நிறைய தமிழக வீரர்கள். தினேஷ் கார்த்திக், பத்ரிநாத், முரளி விஜய் ஆகியோருடன் அடுத்து இணையப்போகிறவர் அஸ்வின். ஆஃப் ஸ்பின்னர். ஏற்கெனவே இவர்



ஒருநாள் மற்றும் 20-20 அணியிலும் இடம்பிடித்தவர். ஐபிஎல்-லில் சிறப்பாக ஆடி இந்திய அணியில் நிரந்தர இடம் பிடிக்க இருக்கிறார் அஸ்வின்.

ஆலிவ் மரங்கள் உயரமாக வளராது. இந்த மரத்தின் தண்டுகள் வளைந்து பல கிளைகள் விட்டு வளரும். இதன் இலைகள் சாம்பல் பூத்த பச்சை நிறத்தில் இருக்கும். இதன் இலைகள் யூகலிப்டஸ் இலைகளைப் போல் இருக்கும். கிரீஸ் நாட்டைச் சேர்ந்தவர்களும் ரோமானியர்களும், சமையலுக்கும், உடலில் தேய்த்துக் குளிக்கவும் ஆலிவ் எண்ணெயைப் பயன்படுத்தினர். இவை வளர்வதற்கு ஏராளமான சூரிய ஒளியும் அதிக மழை இல்லாத தட்ப வெப்பமும் தேவை. ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆலிவ் வகைகள் உள்ளன. 'சமாதானப் புறா' சின்னத்தில், புறா தாங்கியிருப்பதும், ஆலிவ் இலைதான்!

சிலந்தி பூச்சி

பொதுவாக சிலந்திப் பூச்சிகள் தனியாக கூடு கட்டி வாழும். 'ஆர்ப் லீவர்' என்ற ஒரு வகைச் சிலந்தி கூட்டமாகச் சேர்ந்து கூடு கட்டும். இந்த வகைச் சிலந்தி ஆப்ரிக்காவிலுள்ள மழைக் காடுகளில் அதிகமாகக் காணப்படுகிறது. இந்தச் சிலந்திகள் பார்ப்பதற்குச் சிறியதாக இருந்தாலும், காடுகளில் இரண்டு மரங்களுக்கும் இடையே இலை மற்றும் கிளைகளை இணைத்துப் பல மீட்டர் நீளம் கொண்ட வலையைப் பின்னும். இந்த வலை துணியை விரித்தது போன்று காணப்படும். எளிதில் அழிந்து போகாது. மழை, காற்று மற்றும் விலங்குகளால் வலைக்குச் சேதம் ஏற்பட்டால் இவை கூட்டமாகச் சேர்ந்து வேலை செய்து வலையைச் சரி செய்து விடும்.



நடனமாடும் கடல்குதிரை!


கடல் குதிரை

மீன் இனங்களில் சற்று வித்தியாசமானது கடல் குதிரை. இதன் தலை குதிரை போன்று இருக்கும். இதில் சுமார் 50 இனங்கள் உண்டு. சில ரகங்கள் இரண்டடி நீளம் வரை இருக்கும். இது பெரும்பாலும் சற்று செங்குத்தான நிலையில் நிமிர்ந்தே காணப்படும். அந்த நிலையிலேயே நீந்தும்.

'ஆண் கடல் குதிரைகளின் நடனம் போன்ற அசைவால் ஈர்க்கப்பட்டே பெண் கடல் குதிரைகள் தங்கள் இணையைத் தேர்வு செய்கின்றன' என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

ஆண் கடற்குதிரையின் வாலின் அடிப்புறத் தொடக்கத்தில் ஒரு பை உண்டு. அதில் பெண் கடற்குதிரை முட்டை இடும். அவற்றை ஆண் கடற்குதிரை பத்திரமாக அடைகாக்கும். அந்தப் பையில் இருந்து குஞ்சுகள் பொரிந்து வெளிவரும்.

சீனாவில் இந்த உயிரினத்தைப் பிடித்து, உலர்த்தி பொடி செய்து மருந்தாகப் பயன்படுத்துகின்றனர்! சில நாடுகளில் இதில் தாயத்து செய்து பயன்படுத்துகின்றனர். இவை மூடநம்பிக்கை சார்ந்த செயல்கள். இந்த இனத்தை அழிக்கக் கூடியவை. ●



* ஆர்ஃப் லீவர்



* ஆலிவ் இலை

எஸ்.சுப்ரியா.
உ.எண் 79, சென்னை

தியாகுவின் பெட்டி!

மீனவ இளைஞனான தியாகு, ஒருநாள் கடற்கரையில் சென்று கொண்டிருந்தான். அப்போது பையன்கள் கையில் குச்சியுடன் சிரிப்பும் கூச்சலுமாக விளையாடிக்கொண்டிருந்தனர். கூட்டத்தை நெருங்கிச் சென்று பார்த்தான். அவர்களுக்கு நடுவில் ஒரு கடல் ஆமை மல்லாந்து கிடந்தது. அது திரும்ப முடியாமல் போராடிக் கொண்டிருந்ததைப் பார்த்துத் தான் பையன்கள் சிரித்துக் கொண்டிருந்தனர்.

தியாகு அந்த ஆமையை அவர்களிடமிருந்து மீட்டு, கடலில் விட்டான். அது நீந்திச் சென்று மறைந்தது.

சில நாட்களுக்குப் பின்னர் அதே கடற்கரை. நடந்து கொண்டிருந்த தியாகுவுக்கு யாரோ அழைப்பதுபோல் தோன்றியது. திரும்பிப் பார்த்தான். கடலில் இருந்து வெளிவந்த ஆமைதான் பேசியது.

"தியாகு, நீ காப்பாற்றியதை எங்கள் அரசியிடம் சொன்னேன். அவர் உனக்கு நன்றி சொல்லவும் பரிசளிக்கவும் விரும்புகிறார். நீ என்னுடன் வருகிறாயா?".

"எனக்கு நன்றி சொல்ல வேண்டியதில்லை. இருந்தாலும் நான் உங்கள் அரசியின் மாளிகைக்கு வருகிறேன்" என்றான் தியாகு.

ஆமை முதுகில் அவன் ஏறி அமர்ந்தான். அடுத்த சில நிமிடங்களி[l] கடலுக்கடியில் இருந்த அழகி[ய] மாளிகையை அடைந்தான்.

கிளிஞ்சல் மற்றும் முத்து சிப்பிகளால் அழகுற அமைக்க[ப்]பட்டிருந்தது அந்த மாளிகை.

அவனை வரவேற்ற அரசி "தியாகு நீ எப்போதும் எங்கள் நண்[ப]னாக இருக்க வேண்டும். இந்த மாளிகை[யி]லேயே தங்கிக் கொள்ள உனக்கு சம்மதமா?" என்றாள்.

என்ன சொல்வது என்று அவனுக்கு[த்] தெரியவில்லை. என்றாலும் சரி என்ப[து] போலத் தலையை ஆட்டினான்.

"இவ்வளவு இளமையாக இரு[க்]கிறாயே, அரசியே உன் வயது என்ன? என்று கேட்டான்.

"காலத்துக்கும் எனக்கும் ஒரே வயது என்னுடன் தங்கி இருந்தால் நீயும் எ[ப்]போதும் இளமையாக இருக்கலாம்," என்றாள் அரசி.

கடலுக்கு அடியில், தியாகுவின் வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

ஒரு நாள், நாட்டுக்குத் திரும்பச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் தியாகுவுக்கு ஏற்பட்டது. ஆனால், அவனை அனுப்ப அரசிக்கு விருப்பம் இல்லை. "நண்பனே இங்கு இல்லாமல் உமது உலகத்தில் மட்டும் இருக்கக் கூடிய அற்புதம் எது? நீ ஏன் அங்கு செல்ல விரும்புகிறாய்?" என்று கேட்டாள் அரசி.

தியாகுவால் பதிலளிக்க முடியவில்லை. ஆனால், சீக்கிரத்தில் கடலுக்குத் திரும்பி வருவதாக அவன் வாக்களித்தான்.

மறு நாள் காலையில் தியாகு புறப்படத் தயாரானான். அரசி அவனுக்கு ஒரு சின்னஞ் சிறிய பெட்டியைப் பரிசாக[க்]

ஹூர்து எஸ்.ராஜ்

கொடுத்து வழியனுப்பினாள்.

''கடல் அரசியே, இதில் என்ன இருக்கிறது?''

''இதில் ஒரு மந்திர சக்தி இருக்கிறது. இந்தப் பெட்டியை திறக்காதவரை நீ என் னிடம் திரும்பி வரலாம். ஆனால், திறந்து பார்த்தால் திரும்பி வர முடியாது'' என்றாள் அரசி.

தியாகு அதைப் பத்திரமாய் வைத்துக் கொண்டு நகரத்துக்கு திரும்பினான். ஆமை அவனை கரையில் இறக்கிவிட்டது.

அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. கடற்கரையைச் சுற்றிப் பார்த்தான். பின்னர் அங்கிருந்த முதியவரிடம் ''தியாகுவைத் தெரியுமா?'' என்று கேட்டான்.

''நீண்ட காலத்துக்கு முன்னர் அவன் இங்கு வாழ்ந்தான். ஓர் ஆமையைக் காப்பாற்றி கடலுக்கு அனுப்பினான். பின்னர் கடலில் மூழ்கிப் போனான் என்று எனது தாத்தா பாட்டி சொல்லக் கேட்டிருக் கிறேன். அதனால், நாங்கள் கடல் ஆமையை பற்றிக் கவலைப்படுவதில்லை; தொட்டும் பார்ப்பதில்லை'' என்று சொன்னார் அவர்.

அவனுக்கு வருத்தமாக இருந்தது. தான் கடலுக்குச் சென்று மூன்று தலைமுறை ஆயிற்று என்பது புரிந்தது. ஆனால், தனது இளமை பற்றிய ரகசியம் அவனுக்குப் புரியாத புதிராக இருந்தது. சட்டென்று அவனது சட்டைப் பையில் இருந்த பெட்டி நினைவுக்கு வந்தது. உடனே அதை எடுத் துத் திறந்தான். அதிலிருந்து வெளிப்பட்ட புகை அவனைத் தழுவியது.

மறுகணம், அவன் உடல் முதுமை அடைந்தது. தோல் சுருக்கம் கண்டது. பற்கள் விழுந்தன. கண் பார்வை மங்கியது. அவனால் நடக்க முடியவில்லை. அருகில் கிடந்த குச்சியை ஊன்றியபடி தள்ளாடிக் கடற்கரைக்கு வந்து சேர்ந்தான்; ஆனால், கடல் அரசியிடம் செல்லவே முடியவில்லை. ●



இந்திய நாடு

மேகங்களின் வீடு!

கௌதம் ராம்

சிரபுஞ்சி! உலகிலேயே மிக அதிகமாக மழை பெய்யும் இடம்! இது இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள மேகாலயாவில்தான் உள்ளது. சமஸ்கிருதத்தில் மேகாலயா என்றால் மேகங்களின் வீடு என்று பொருள். இதன் பரப்பளவு சுமார் 23 ஆயிரம் சதுர கி.மீ. இதில் மூன்றில் ஒரு பகுதி அடர்ந்த காடுகள்.



• எலிஃபண்ட் ஃபால்ஸ்

மேகாலயாவின் தலைநகரம் ஷில்லாங். மாநிலத்தின் மக்கள் தொகை 23 லட்சத்து 19 ஆயிரம். இவர்களில் 63 சதவிகிதம் பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்.

தோற்றம்

காஷி, காரோ, ஜெயிந்தியா ஆகிய மூன்று பழங்குடி இனத்தினர் இப்பகுதியின் பூர்வீக குடிகள். இந்த இன மக்களின் மன்னர்கள் தனித் தனியே தங்கள் பகுதியை ஆட்சி செய்து வந்தார்கள். 19ஆம் நூற்றாண்டில் இந்த பகுதிகள் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வந்தன. இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, 1972 ஜனவரி 21ஆம் தேதி மேகாலயா தனி மாநில அந்தஸ்தைப் பெற்றது.

மொழிகள்

மேகாலயாவின் ஆட்சி மொழி ஆங்கிலம். என்றாலும், மாநிலத்தின் முக்கிய மொழி காஷி. காஷிமொழிக்கு பிரத்யேகமான வரி வடிவம் இல்லை. இன்னொரு முக்கிய மொழி காரோ. இது நாகாலாந்தில் பேசப்படும் போடோ மொழியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது.

தாரிங், சாந்தா, பாந்த்ரா, போகை, பூபை, உம்கிரி, உமியம், திகரு, கிசியாங் ஆகியவை மேகாலயாவின் முக்கிய நதிகள். காசி மலைப் பகுதியிலுள்ள ஷில்லாங் சிகரம் மேகாலயாவின் மிக உயரமான மலைச்சிகரம். அங்கே இந்திய விமானப் படைத்தளம் ஒன்று அமைந்துள்ளது.

மழையும் வறட்சியும்!



வடகிழக்குப் பருவ மழை, தென் மேற்குப் பருவ மழை இரண்டு வகையிலும் காஷி மலைப் பகுதியில் ஆண்டுக்கு 12 ஆயிரம் மி.மீ. மழை பெய்கிறது. ஒரே நாளில் மிக அதிக அளவு மழை. ஒரே மாதத்தில் மிக அதிக அளவு மழை என்ற வகையிலும் கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்திருக்கிறது சிரபுஞ்சி. ஆனால், 'மழை நின்றபின், மக்கள் வெகு தூரம் சென்று தண்ணீர் பிடித்து வரவேண்டிய அவலம். மழை நீர் சேமிப்புத் திட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்துவதுதான் சிரபுஞ்சியின் தண்ணீர் தாகத்தைத் தீர்க்க ஒரே வழி' என்கிறார்கள் நிபுணர்கள்.

நிர்வாகம்

ஏழு மாவட்டங்கள் கொண்ட மேகாலயா வின் சட்டமன்றம், 60 உறுப்பினர்களைக் கொண்டது. பாராளுமன்றத்தின் லோக்சபா வுக்கு ஷில்லாங், துரா ஆகிய இரு தொகுதி களிலிருந்து இரண்டு எம்.பி.க்கள் தேர்ந் தெடுக்கப்படுகிறார்கள். ராஜ்யசபாவில், மேகாலயாவுக்கு ஒரே ஒரு இடம் தான். இந்த மாநிலத்துக்கு தனி யாக உயர்நீதி மன்றம் இல்லை. கௌஹாத்தி உயர்நீதிமன்றத்தின் பெஞ்ச் ஒன்று 1974ஆம் ஆண்டு முதல் ஷில்லாங்கில் செயல்படுகிறது.



• பூராபானி ஏரி

தொழில்

பிரதான தொழில் விவசாயம்தான். மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பகுதியினர் விவசாயத்தையே நம்பி இருக்கிறார்கள். நெல்லும், சோளமும் முக்கிய பயிர்கள். உருளைக் கிழங்கு, கரும்பு, பருத்தி, எண்ணெய் வித்துக்கள், சணல், பாக்கு போன் றவை தவிர அன்னாசி, ஆரஞ்சு, வாழை போன்ற பழப் பயிர்களும் விளைகின்றன. 'காஷி மாண்டரின்' ஆரஞ்சு, வடகிழக்கு இந்தியாவில் மிகவும் பிரபலமானது. மேகாலயாவின் மலைப் பகுதிகள் மலைத் தோட்டப் பயிர்கள், பழப் பயிர்கள், பூக்கள் மற்றும் காய்கறிகளை விளைவிக்க உகந் தவை என்றாலும், மாநிலத்தின் உணவு தானிய உற்பத்தி, மாநிலத் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு இல்லாததால், மக்கள் நெல், சோளம் போன்றவற்றை விளை



• வாங்கலா திருவிழா



• மரப்பாலம்

விக்கவே முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

பிரம்பு முடைவதும், துணி நெய்வதும் இவர்களது நெடுங்கால பாரம்பரியம். இவர் கள் தயாரிக்கும் 'டிலிங்' என்ற பாரம்பரிய பிரம்புப் பாய், இருபது, முப்பது வருடங்கள் வரையிலும் உழைக்கக் கூடியது.

வளர்ச்சி நிலை

நிலக்கரி, சுண்ணாம்புக்கல், கிரானைட், சிலிமனைட், டாலமைட் என்று பலவித மான கனிமங்கள் இங்கு கணிசமாகக் கிடைக்கின்றன. பொதுவாகவே சாலை மற்றும் ரயில் போக்குவரத்து, மின்சாரம் போன்ற அடிப்படைக் கட்டுமான வசதிகள் குறைபாடு மாநிலத்தின் தொழில்வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக உள்ளது.

ஆறுகளின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைகளில் பெரும்பாலானவை மரத் தாலானவை.

மேகாலயாவில் பெரிய ரயில் நிலை யங்கள் இல்லை. ஷில்லாங்கிலிருந்து 40



• லாஹோ நடனம்

கி.மீ. தொலைவில் இருக்கும் உம்ரோய் என்ற இடத்தில் ஒரு சிறு விமான நிலை யம் உள்ளது. கொல்கத்தாவிலிருந்தும், அண்டை மாநிலமான திரிபுராவின் தலை நகரான அகர்தலாவிலிருந்தும் வருகிற சிறு விமானங்கள் மட்டுமே இங்கு தரை இறங்க முடியும்.

மேகாலயா மாநிலத்தின் தலைநகரான ஷில்லாங்கில் ஒரு ஐ.ஐ.எம். (இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மேனேஜ் மென்ட்) இருக்கிறது.

சுற்றுலா

மேகாலயாவில் இரண்டு தேசியப் பூங்காக்கள், மூன்று வனவிலங்கு சரணா லயங்கள் உட்பட சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பல விஷயங்கள் இருக்கின்றன மலைப் பகுதிகளில் மலையேற்றம், பாறை ஏறும் சாகச சுற்றுலாவுக்கு ஏராளமான வாய்ப்புகள் இருப்பதால், அதனை முன் னிருத்தி சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் நடவடிக்கைகளில் மேகாலயா அரசு ஆர்வம் காட்டுகிறது.

மேகாலயாவின் சுண்ணாம்புப் படிமங்கள் கொண்ட மலைப்பகுதிகளில் 500க்கும் அதிகமான குகைகள் அமைந்துள்ளன ஜெயந்தியா மலைப் பகுதியில் இருக்கும் 'கிரெம் லியட் ப்ரஹ்' மிக நீளமான குகை 'சின்ராங் பாமியாங்' மிக ஆழமான குகை

இந்த குகைகளைக் காணவும், ஆராய்ச்சி கள் மேற்கொள்ளவும் அயல்நாட்டு சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வருகிறார்கள்.

கலை

இசையும், நடனமும் மேகாலயா மக்களின் வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்தவை. பிறப்பு, இறப்பு, திருமணம் போன்ற குடும்ப நிகழ்வுகள் ஆகட்டும் இதர சமூக நிகழ்வுகளாகட்டும்; அவற் றில் கண்டிப்பாக புல்லாங்குழலுக்கும் இதர தோல் இசைக் கருவிகளுக்கும் நிச்சயம் இடமுண்டு.

காரோ மலைப்பகுதியில் அறுவடைக் காலத்தை ஒட்டிக் கொண்டாடப்படும் 'வாங்கலா திருவிழா' மிகவும் முக்கிய மானது.

'பேதிங்காம் திருவிழா'வின்போது மக்கள் தீய சக்திகளை விரட்டும் விதமாக, தோல் வாத்தியங்களையும், ஊது குழல்களையும் இசைத்தபடி, நடனமாடிக் கொண்டே வீதி களில் ஊர்வலம் செல்வார்கள். மாலையில் இளைஞர்கள் மத்தியில் கால்பந்து போன்ற விளையாட்டுப் போட்டி நடக்கும். 'லாஹோ' என்பது மேகாலய மக்களின் நடனத் திருவிழா!





சூப்பர் வீடு!

● 'பறவை வீடு' பற்றிய கட்டுரை பிரமாதமாக இருந்தது. படிக்கப் படிக்க சுவாரசியம்! - **ஆர்.அம்பிகா, மதுரை.** ● இரண்டு பொருள்பட இலக்கியம் நடமாட இன்பக் கூத்தாட இதயம் கவர்ந்த ஈதான் மலையைக் குறுக்கிய 'ஈ'. தமிழமுது இனிய அமுது. - **ஆர்.ஆர்.உமா, செல்வமருதூர்.** ● குட்டீஸ் கைவண்ணம் அருமை. சிரிச்சுவை பகுதி படிக்க, படிக்க ஆனந்தம்! - **சு.அபிஷேக், சென்னை.** ● அறிந்தும் அறியாமலும் உட்கொள்கின்ற பதார்த்தங்களில் கலந்திடும் 'கவர்ச்சி சுவை' எவ்வாறெல்லாம் தொல்லை விளைவிக்கிறது என்பதை உணர்த்தியது டாக்டர் பக்கம். - **எஸ்.ஏ.கேசவன், கழுகாசலபுரம்.** ● படியுங்கள் தலைப்பில் ஆசிரியரின் தலையங்கம் பிள்ளைகளுக்குத் தன்னம்பிக்கை ஊட்டுவிதம் அருமையாக இருந்தது. கவர் ஸ்டோரி மீண்டும் நம்பியூர் பற்றி படித்தபோது பெருதகைமயாகவும், வியப்பாகவும் இருந்தது. - **இ.பு.ஹேமமாலினி, சென்னை.** ● அரை வினாடி மாத்திரம் அறிவியல் கதையாக இருந்தாலும் படிக்கும் எங்களுக்கு நல்லதொரு நீதியைக் கற்பித்தது. எதிரியாக இருந்தாலும் அவரது அறிவின் தன்மையைப் போற்ற வேண்டும் என்பதை உணர்த்தியது. - **பி.சர்வேஸ்வரன், மதுரை.** **நம்பியூர்** பள்ளி மாணவர்களின் உழைப்பும் அவர்களைத் தூண்டிய ஆசிரியர்களின் ஊக்கமும் பிரமிப்பூட்டியது. அட்டையிலேயே இடம் பெற்றிருந்த அம் மாணவர்களின் படங்களைப் பார்த்ததும் நாங்களும் அதிக அளவில் எழுதிக் குவிக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. - **ம.அக்ஷயா, அரூர்.** ● வானியல் பகுதியில் ஓரியன் என்ற கிரேக்கச் சொல்லுக்கு வேட்டைக்காரன் என்ற பொருள் என்பதைப் படித்து வியந்தேன். - **ஆர்.ஜி.காயத்ரி, திசையன்விளை.** ● சம்பவம் பகுதியில் அண்ணல் மகாத்மா காந்தி, அன்னை தெரசா, வீரசிவாஜி இவர்களின் வாழ்க்கைச் சம்பவங்கள், இன்றைக்குப் படிக்கும் மாணவ - மாணவியருக்கு எளிதில் புரிய வைக்கும் அபூர்வ துணுக்குகள். - **எம்.சிவரஞ்சனி, வலங்கைமான்.** ● யானைக்குத் தான் தந்தம் இருக்கிறது என்று கேள்விப்பட்டுள்ளோம். திமிங்கலத்துக்கும் தந்தம் உள்ளது என்பதைப் படிக்கும்போது வியப்பாக இருந்தது. - **எம்.மிருணாளினி, மதுரை.** ● கோகுலம் முற்கோப்பையைப் பெற்ற காமராஜ் மேல்நிலைப் பள்ளி (நம்பியூர்) பற்றிய தொகுப்பு வெகு சிறப்பு. - **ஆர்.ஜி.ஜே. ஜெய்ஹரிதா, மணலிவிளை.** ● ஹெலன் கெல்லரைப் பற்றிப் படித்தபோது, நாமும் ஏதாவது நல்லது செய்து சாதிக்க வேண்டும் என்ற தன்னம்பிக்கை ஏற்பட்டது. - **எஸ்.வினித் மாதவன், மதுரை.** ● நம் வாழ்வில் தினசரி நடக்கும் நிகழ்ச்சிகளுக்குக் காரணம் என்ன என்பதன் அறிவியல் விளக்கப் பகுதி அருமையானது! - **எம்.ஆஷிக் அஸ்வின், மதுரை.** ● பலகாரங்களில் அலர்ஜி தருபவை பற்றிய விவரம் படித்தேன். நாக்கிற்குத் தடா போட முடிவெடுத்தேன். கட்டுப்பாடு அவசியமல்லவா? - **ஆர்.ஜி.விஜய்சாய்பாலா, திருச்செந்தூர்**

பெயரைச் சொல்; பரிசை வெல் - 1







1. ____________ 2. ____________ 3. ____________

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

....

வீட்டு முகவரி : ....

..............................பின்கோடு ....

போட்டி
பரிசு
ரூ.1000/-



கொடுக்கப்பட்டுள்ள படங்களை கவனித்துப் பாருங்கள். இவை தொடர்பான செய்திகளும், இவற்றுக்கான வேறு படங்களும் இந்த இதழில் இடம் பெற்றுள்ளன. அவற்றின் மூலம், இங்கே தரப்பட்டுள்ள படங்களின் பெயர் என்ன என்று கண்டுபிடித்து, கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முடிவு தேதி : 30.4.2010

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,

சென்னை - 32

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1551


1552


1553


1554


1555


1556


1557


1558


1559


1560


1561


1562


1563


1564


1565


1566


1567


1568


1569


1570


1571


1572


1573


1574


1575

பெயர் மற்றும் விவரங்கள் 57 ஆம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/09-11 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/09-11 • Registered as a Newspaper in Srilanka

